


# அமரர் பாலசிங்கம் தர்மபூபதி

அவர்களின்

ஞாபகார்த்தம் குறித்த

# நினைவு மலர்

02.06.2013

உ

சிவமயம்

"KALAA POOSHANAM"
K.S. SIVA[illegible]ARAJAH
RETIRED [illegible] PRINCIPAL
ADITYA[illegible] ROAD
KOKUVIL WEST



# அமரர் பாலசிங்கம் தர்மபூபதி

## அவர்களின் சிவபதப் பேறு குறித்து வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

**22.04.2014**

கங்கை பிறிண்டேர்ஸ்.

சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்



மண்ணுலகில்
14.04.1943

விண்ணுலகில்
03.05.2013

# அமரர் பாலசிங்கம் தர்மபூபதி

## திதி நிர்ணயம்

அருள்வழியும் திருமுகமும் அழகுதவழ் புன்னகையும்
வருவிருந்தும் தேடும் வாழ்நிலையும் - உருக்கமுடன்
இறைவனடி போற்றும் இளநெஞ்சும் கொண்டுயர்ந்த
அறம் வளர்த்த பாலசிங்கம் தர்மபூபதி சென்றார் இறையடி

உ

சிவமயம்



அமரர்

# பாலசிங்கம் தர்மபூபதி

அவர்களின்

ஞாபகார்த்தம் குறித்த

# நினைவு மலர்

**02.06.2013**

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

**அன்பைச் சொறிந்து பண்பை - வளர்த்து**

**உற்ற வழிகாட்டி உலகில் நாமுயர**

**ஏணிப்படியாய் ஏம்முடன் இருந்து**

**எம்மையெல்லாம் மாண்புபெற வாழவைத்திட்டு**

**விண்ணுலகேகிய எம் அன்புத் தெய்வம்**

**பொன்னடிகளில்**

**இம்மலினை காணிக்கையாக்கின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத்தினர்.

## அமரர் பாலசிங்கம் தர்மபூபதி அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்

நாற்புறமும் கடல் அன்னையின் தாலாட்டில் நீண்டு பரந்து விரிந்து கிடப்பது நமது ஈழமணித்திருநாடு. "பொன்சேர் இலங்கைச் சிரமெனவே வரும் புண்ணியம் ஓங்கிடும் யாழ்ப்பாணம்" என இத்திருநாட்டின் புண்ணிய பூமியாக ஏற்றப்படும் யாழ்ப்பாண மண்ணின் மத்தியில் அமைந்திருப்பது கொக்குவில் என்னும் நற்கிராமம் வற்றாத நீர்வளமும், வானுயரத் தென்னை கமுகு பனைவளமும் கொண்டு வேளாண்மைத் தொழிப் பிறந்தோங்க இம்மண் இனிதே விளங்குகின்றது. தாவடியூரின் தென் எல்லையாக விளங்கும் இவ்வூரின் பெயர் விளங்க, கற்றோரும் மற்றோரும் போற்றிசைக்க, இல்லறம் என்னும் இனிய மனையறத்தை நடாத்தியவர்கள் அமரர்களான சின்னத்துரை சின்னத்தங்கச்சி தம்பதிகளாவர்.

*"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்*
*நன்கலம் நன்மக்கட் பேறு"*

எனும் பொய்யாமொழிப்புலவரின் வாக்கிற்கிணங்க இவர்கள் இல்லறப் பயனாக இரண்டு பெண்குழந்தைகளைப் பெற்றெடுத்தார். அவர்கள் தர்மபூபதி, தங்கரத்தினம் எனும் மாற்றுக்குறையாத தங்கங்களாவார்.

தர்மபூபதி அவர்கள் இளமை முதற் கொண்டு சீரிய நற்பண்புகளை உடையவராகத் திகழ்ந்தார். இன்முகமும் கனிவான பேச்சும் இணயபார்வையும் இயல்பாகவே இவரிடத்தில் குடிகொண்டிருந்தன. இளமை முதற் அனைவராலும் நேசிக்கப்படுவராகவும் அனைவரையும் நேசிப்வபராகவும் அன்போடு அரவணைக்கும் உத்தம குணமுள்ளவராகவும் விளங்கினார் எப்பொழுதும் பிறருக்கும் உதவுவதில் பிறர் குறை களைவதிலுமே இவரது நாட்டம் செல்லும்.

பெண்மைக்குரிய அச்சம்,மடம், நாணம், பயிர்ப்பு எனும் நால்கைக் குணைங்களையும் நல்அணி கலன்களாகச் பூண்டொழுகினார். இறைபணி ஆற்றுவதில் அயராத பற்றுறுதி மிக்கவராக விளங்கினார். அதிகாலையில் சூரியன் உதிக்குமுன் எழுந்து ஆசாரசீலராய் மலர்களைப் பறித்து ஆலய வழிபாட்டிற்கென இவர் கொண்டு செல்வதை இளமைமுதல் இறுதிக் காலம் வரை தளராமல் மேற்கொண்டார்.

அழகும், குணநலனும் ஒருங்குசேர் விளங்குவது அறிது என்பார். திருமகளைப் போன்ற அழகும் அருங்குணநலனும் ஒருங்கே வாய்ந்த இவரை இவரது பெற்றோர்கள் கல்வி கேள்விகளில் சிறந்தவராகவே வளர்ந்தனர். இவர் உரிய வயதில் முன் செய்த தவப்பயனின் விளைவால் உடுவில் தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த வேளாண்குல உத்தமர்களான பொன்னையா , பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனான உத்தம குணமிக்க பாலசிங்கம் என்னும் கண்ணியவானை மணாளனாக வரித்துக் கொண்டார்.

இருவரும் சேர்ந்து வாழ்ந்த இல்லறம் என்னும் இனிய மனையறம் வளர்பிறைபோல் நாளும் வளர்ந்தோங்கியது. இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டேஎனும் வாக்கிற்கிணங்க விருந்தினர்களை உபசரிப்பதில் அயலவர்களை அரவணைப்பதிலும் இருவரும் ஒருமித்த கருத்தினராய் இனிதே வாழ்ந்தனர். உற்றவர் ஊரவரின் புகழ்மொழிகளாலும் வாழ்த்து ரைகளாலும் இவர்களது மனையறம் மாண்புறவே திகழ்ந்தது.

சுற்றத்தவருடன் மகிழ்ந்திருந்த வேளையில் செல்வத்துட் செல்வமாய் மக்கட் செல்வங்களை மனம் போல் நிறைவாகப் பெற்றார். இல்வாழ்வின் பயனாக மூத்த மகளாக சத்தியாதேவியையும் அவரின் பின்னே சசிகலாதேவி, அமரர் புவேந்திரராஜா, மோகனராஜா, கிருபாலராஜா, நித்தியாதேவி, தர்மபாலினியோடு கடைக்குட்டியாக சுஜேந்தனையும் பெற்று மகிழ்ந்தார். தன் அன்புக் கணவரின் துணையுடன் அனைவரையும் உரிய முறையில் கல்வி கற்று உயரச் செய்தார். உத்தம குணமுள்ளவர்களாக வளர்ப்பதில் கண்ணுங் கருத்துமாக விளங்கினார். பிள்ளைகளின் முன்னேற்றமே பெரிது என நினைத்தார். தன் பிள்ளைகளோடும் குடும்பத்தினரோடும் உறவினரோடும் நண்பர்களுடனும் ஒன்றாக இருந்து உண்பதும், உறவாடுவதும், கண்டிப்போடு அன்பையும் சேர்த்து வளர்த்து தானும்வாழ்ந்து காலம் மறத்தற்கரியதே.

தனது பிள்ளைகளை உத்தம குணமுள்ளவர்களாக வளர்த்தது மட்டுமன்றி அவர்களின் இல்வாழ்வில் பயனுற விளங்கும் வண்ணம் அருதுங்குணமிக்க மருமக்களைத் தன் பிள்ளைகளின் வாழ்க்கைத் துணைகள் ஆக்கினார். இந்த வகையில் மூத்த மகளான சத்தியாதேவியை செல்வராஜாவிற்கும், தொடர்ந்து சசிலாதேவியை மங்களேஸ்வரன் என்பவருக்கும் மோகனராஜாவை ஸ்ரீலக்சுமிக்கும் கிருபாலராஜாவை விவேகினிக்கும் நித்தியாதேவியை ஜெயானந்தனுக்கும் மணமுடித்து

வைத்தோடு தனது இறுதிக் காலத்தில் கடைசிமகனான சுஜேந்தனை பவயாதேவிக்கும் மணம் முடித்து வைத்து மகிழ்வடைந்தார். தனது பிள்ளை களின் இல்வாழ்வின் பயனாகக் கிடைத்த பேரப்பிள்ளைகளின் அன்பாலும் பாசத்திலும் கட்டுண்டு தனது நிறைவுக் காலத்தை மனநிறைவாகவே கழித்தார்.

மனித வாழ்வென்பது நித்தியமானது அல்ல. அது நீரில் குமிழிபோல அநித்தியமானதே. தோன்றலும் மறைதலும் இவ்வுலகின் தொல்லியல்பே. இவ்விதியின் நியதியில் இருந்து யாரும் விலகிவிடமுடியாது. இந்த வகையில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அம்மையார் அவர்கள் ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல, பெற்ற உறவும் சதமல்ல, யாரும் சதமல்ல, எதுவும் சதமல்ல இணையில்லா இறைவனே சதம் என 03.05.2013 அன்று இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் இணையடி நிழலில் ஈடில்லா இன்ப வாழ்வு பெற்றார்.

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்"*

ஓம் சாந்தி.... ஓம் சாந்தி... ஓம்சாந்தி...

## கணவனின் புலம்பல்

அன்பிற் கினியாளே ஆசைத் துணையாளே
அல்லும் பகலும்என்னில் இகலாது இனித்தவளே
துன்பம் எனும் நிலை தொடராமல் காத்தென்னை
துணையாக இருந்தே நல்விருந்தாய் ஆனவளே
இன்முகப் பார்வையும் இனிய பேச்சழகும்
இதயத்தில் இன்னமும்விலகாமல் இருக்குதடி
என்னரும் தவமே எனதுயிரே கண்மணியே
ஏங்கிந் தவிக்கின்றேன் என்னிடம் வந்துவிடு.

இல்லற வாழ்வின் இனிய சுகம் கண்டே
இமையோடு விழியாக விலகாமல் இருந்தவளே
நல்லவன் என்றுன்னை நானிலந்தோர் போற்றும் வண்ணம்
நயமாக நீ நடந்த நாளும் மறக்கவில்லை
பல்லாண்டு வாழ்வாய் என பார்த்து மகிழ்ந்திருக்க
பாதியில் போனதுமேன் விதியோ என் தவமே
எல்லாம் மாயை என எமன் வந்து அழைத்தானோ
ஏங்கித் தவிக்கின்றேன் இன்முகம் காட்டுமடி.

## பிள்ளைகள் புலம்பல்

அன்பெனும்நெய்யூற்றி அறிவெனும் சுடரேற்றி
அவணியில் நாம் வாழ அருந்தவம் செய்தவளே
தன்னலம் கருதாத் தனிப்பெரும் பாசத்தால்
தாயெனும் நிலையில் நாம்போற்றும் தெய்வம் நீர்
உன்னரும் கரங்களால் உவப்போடு தந்தளிக்க
ஒரு பிடிச்சோறும்நாம்மறந்தறியோமே
என்னரும் அம்மாவே ஏங்கி எமை அழவிட்டே
எங்கு நீர் சென்றீர் எம்முயிரும்துடிக்குதம்மா

ஆலமர விழுதாய் அனைவரையும் தாங்கி நின்றே
அன்பு மழை பொழிந்தேஅன்னையாகக்காத்தவளே
காலமெலாம் எம்மை கருத்தோடு காப்பாய் என்று
பூத்திருந்த உள்ளத்தில் புயற்காற்று வீசியதோ
காலனவன் கணக்கில் கைவிட்டுப் போவதற்கோ
கடிதெனவே மகனின் திருமணமும்பார்த்தாய்
நாளெல்லாம் தவிக்கின்றோம் நம்முயிரே அம்மாவே
நம்பியே அழைக்கின்றோம் நம்மிடம் வாருமம்மா

## மருமக்கள் புலம்பல்

ஆசையாய் மாமி என்ற அன்பான வார்த்தை இனி
ஆரிடம் நாம் சொல்வோம் அழுகின்றோம் உமை எண்ணி
பாசமலராய் எமைப் பரிவோடு நெஞ்சணைத்தே
பாசமழை பொழிந்தே பண்பினால் சுமந்தவரே
தேசம் எங்கும் தேடினும்கிடைத்திடுமே உம்மைப்போல்
தெய்வப் பிறவி ஒன்று நாம் அறியோம் மாமியே
ஈசனவன் இணையடியில் இரண்டற நீர் கலந்தாலும்
எமக்கு நீர் வேண்டுமென ஏங்குகிறோம் அறிவீரோ

## சகோதரி புலம்பல்

அக்கா என்று அன்போடு நான் அழைத்தால்
அடுத்த கணம் வந்தே அணைக்கின்ற தெய்வமே
பக்கத்தில் நீர் இருக்கப் பலமென்று நான் எண்ணி
பலநாளும் மகிழ்ந்திருந்தேன் பாதியில் போனீரோ
சொர்க்கத்தின் மகிழ்ச்சியைச் சுகமாகத் தந்தவளே
சொந்த மென்று எனக்கு உனையன்றி யாருமில்லை
துக்கத்தில் தவிக்க விட்டு தூரதேசம் சென்றாயோ
ஏக்கத்தில் தவிக்கின்றேன் இக்கணமே வந்துவிடு

## மைத்துனர் புலம்பல்

இன்முகமும் இனியபேச்சும்இதயத்தில் வஞ்சமில்லா
இணையில்லாப் பிறவி நீர் என்று இருந்தேன்
அன்புக்கும்இலக்கணமாய் பண்புக்கும் சிகரமாய்
அனைவரையும்தாங்குகின்ற அருமைமிகு மைத்துனியே
துன்பத்தில் எமையெல்லாம்தவிக்கவிட்டுப் போவதற்கா
தூயவளே ன்னை, மழையாகப் பொழிந்தீரோ
என்பும் உருகிட இதயமும் கனத்திட
உனக்காக அழுகின்றோம் ஒருகணம்வாராயோ

## பேரப்பிள்ளை புலம்பல்

கொஞ்சித் தழுவி கும்மாளம் போடும் நாம்
கட்டி அணைத்து முத்தமிட்டதெய்வதே
விஞ்சிய அன்பினால் விலகாமல் எம்மோடு
விடிய விடியக் கதைபேசி மடிதந்ததாயே
நெஞ்சிலே எமைச் சுமந்தீர் நினதன்பில் திளைத்தோமே
நேற்றுவரை எம்முடன் நேசமாய் இருந்துவிட்டு
பஞ்சென்று காற்றிலே பறந்துமே போனீரோ
பரிவோடு அழைக்கின்றோம் பார்த்திடவாருங்கள்

# 01 தைப்பொங்கல்



"பொங்கல்" திருநாளை நாம் அனைவரும் காலங்கால மாகக் கொண்டாடிவரும்மிக முக்கியமான திருநாளாகும். இதனைத் தமிழர் திருநாள் என்றும் கொண்டாடி வருகின்றனர்.

முதல் நாள் போகி, இரண்டாம் நாள் பொங்கல் மூன் றாம் நாள் மாட்டுப் பொங்கல், நான்காம் நாள் கன்னிப் பொங்கல்

சோதிடப்படி பன்னிரண்டு மாதங்களும் மேஷம், ரிபஷம், மிது னம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்று பன்னிரண்டு ராசிகளால் அழைக்கப்படுகின்றன.

சூரியன் ஆறுமாதங்கள் தெற்கிலிருந்து வடக்கு நோக்கியும் (உத்தராயணம்) பின்னர் ஆறு மாதங்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக் கியும் (தக்ஷிணாயனம்) பயணப்படுவதாகவும் கூறப்படுகின்றன. அத னைத் தற்போதைய விஞ்ஞானிகளும் ஒப்புக் கொள்கின்றனர்.

சூரியன் தைமாதம் முதல் ஆனி மாதம் வரை தெற்கிலிருந்து வடக்கு நோக்கியும் ஆடிமாதம் முதல் மார்கழி மாதம் வரை வடக்கி லிருந்து தெற்கு நோக்கியும் பயணமாகின்றார்.

இதில்தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் காலம் தேவர் களுக்குப் பகற் பொழுதாகவும், வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப்பயணம் செய்வது இரவு காலமாகவும் விளங்குவதாக சைவ ஆகமங்கள் கூறுகின்றன.

மார்கழி மாதமானது தேவர்களுக்கு விடியற் காலைப் பொழு தாகும். எனவே தான் அம்மாதத்தில் நம் முன்னோர்கள் அதிகாலையில் எழுந்து குளித்து இல்லத்தின் வாயிலைச் சுத்தம் செய்து கோலமிட்டு வாயிலிற் கோலத்தின் மேல் பூ வைக்கும் வழக்கினைக் கைக்கொண்டனர்.

தைமாதம் முதல் நாளன்று சூரியன் தனுசு ராசிலிருந்து மகரராசியில் நுழைகின்றார். அந்நாளே தைமாதப்பிறப்பு என்றும் மகர சங்கிராந்தி" என்றும் வழங்கப்பெறுகின்றது. சூரியன் இதுவரைதான்

பயணம் செய்ததனை நிறுத்தி, தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பயணத்தினை ஆரம்பிக்கும்நாளாகும். தேவர்களின் பகல் பொழுது ஆரம்பநாளாகும். நாம் எந்த நல்ல காரியத்தையும் பகற் பொழுதில் அதுவும் விடியற்காலைப் பொழுதில் செய்வதனைச் சிறப் பாகக் கருதுவதால் தைப்பொங்கலும் விடியற்காலையிற் சூரிய உதயத் தின் போது கொண்டாடப்படுகின்றது

சுபகாரியங்களைச் செய்ய உத்தராயணம் சிறந்த காலமாகும். போரிற் காயம்பட்ட பீஷ்மர் தக்ஷிணாயன காலத்தில் மரணத்தை விரும் பாது உத்தராயணத்தை எதிர்பார்த்து இருந்து அக்காலத்தில் மரணத்தை ஏற்றார் என்பர். இந்நன்நாள் உழவர் திருநாளாகவும் கொண்டாடப் பெறுகின்றது.

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்"*

எனத் திருவள்ளுவரும்

*"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"*

எனப் மணிமேகலையும் கூறுகின்றன. இதனால் உழவின் பெருமையும் மகிமையும் நமக்கு நன்கு புலப்படுகின்றது.

இப்பொங்கல் நன்னாளில் நாம் அனைவரும் புத்தாடை புனைந்து கொண்டாடுவது வழக்கம்

பொங்கலன்று அதிகாலையில் எழுந்து குளித்து சூரியனை நோக்கி வீட்டின் வாயிலில் பொங்கலிடுகின்றனர். தரையில் வண்ணக் கோலமிட்டு திருவிளக்கினை ஏற்றி அதன்முன், பூ, பழம், வெற்றிலை, தேங்காய் தோகையுடன் கூடிய கரும்பு, மஞ்சள் படையல் செய்வதுடன் காய்கறி கிழங்கு வகைகளையும் படைக்கின்றனர்.

தூய மண் அடுப்பிற் பொங்கலும், சர்க்கரைப் பொங்கலும் இட்டு சூரிய உதயத்திற் சூரியனுக்குப் படையல் செய்கின்றனர்.

தேவர்களின் நாள் தொடக்கமான அந்நாள் நமக்கு நல்ல பலன் களை அழிக்கும் ஆண்டாகத் ஆரம்பிக்க வேண்டும் என்ற நோக்கமே

காரணமாகும். சூரியன் இல்லையேல் மனிதன் முதல் புல்பூண்டுவரை உயிர் வாழமுடியாது என்பது உண்மை அல்லவா?

பொங்கல் நாளன்று உழவர்கள் தன் உழைப்பின் பயனாக விளைந்த புது அரிசியினைக் கொண்டு பொங்குவது வழக்கம்

அந்நாளிற் பெரியோர்களைக் கண்டு ஆசி பெறுவதும், பெரியவர்கள் ஆசிபெற வந்தவர்கட்கு "பொங்கல் படி" என வழங்கும் தொகையினை அன்பளிப்பாக மனமுவந்து அளித்தலும் வழக்கமாகும்.

தொழிலாளர்கள் தத்தம் விளைபொருட்களை அளித்துப் பெரியவர்களிடம் ஆசி பெறுவதும் பெரியோர்கள் அவர்கட்குப் பொருள் வழங்குதலும் இன்றும் கிராமங்களில் நடப்பதனைக் கண்கூடாகக் காணலாம்.

இச்சூரிய வழிபாட்டினை நம்மையன்றி சீனர், ஜப்பானியர், பாரசீகர்கள் எல்லோரும் அவரவர் வழியில் வழிபடுகின்றனர். நம் சமய சாத்திரங்கள் சூரியனின் இருதயத்தில் சிவபெருமான் எழுந்தருளியிருந்து ஆன்மாக்களுக்கு அருள் பாலிப்பதாகக் கூறுகின்றன. நவ நாயகர்களில் தலைசிறந்த விளங்கும் சூரிய பகவான் பெருமையினைப் பல வேதங்களும் புகழ்கின்றன.

சூரியன் வட்ட வடிவத்தின் மத்தியில் எட்டுப் பத்மதளங்களும், அதன் உட்பக்கம் எட்டுக் கோணங்களும், அதன் மையத்தில் ஓம் ஹராம், ஹீம் என்ற பீஜாட்சரரூபமாயும், கத்தி, கதாயுதம், சங்கம், பத்மம் என்னும் ஆயுதங்களைக் கையில் ஏந்தி வேத சொரூபியாய் விளங்குகின்றார்.

இவரை மனமுருகத் தியானித்து சிவசூரியாயநம:" எனச் செந்தாமரைப் பூ செண்பகப்பூக்களைக் கொண்டு இருமுறை ஆன்மப் பிரதக்ஷணம் செய்து வைகர்த்தனாய நம முதலான பன்னிருநாமங்களைக் கூறி, பன்னிரண்டு நமஸ்காரங்கள் செய்து, விரும்பிய வரங்களை வேண்டினால் வேண்டுவது கிடைக்கும்.

சித்திரை வருடப்பிறப்பைப் போலவே ஸங்கராந்தியில் தைமாதப் பிறப்பன்று ஸ்ங்கராந்தி புருஷனின் சொரூபம், வாகனம் உணவு ஆபரணம், முதலியவற்றைக் கூறி, அதன் பலன்களையும் பஞ்சாங்கத்திற் குறிப்பிடுவர்.

## 02 மாட்டுப் பொங்கல்

பொங்கல் தினத்தின் மறுநாள் கொண்டாடப்பெறுவது மாட்டுப் பொங்கல், இது மாட்டுப் பொங்கல், கன்றுப் பொங்கல், கணுப்பண்டிகை எனவும் வழங்கப்படுகின்றது.

பசுக்களின் உடம்பில் எல்லாத் தேவர்களும், சகலோகங்களும் இருப்பதாலும் பசுக்களை வணங்கி வழிபடும் நாளாகக் கொண்டா டுகின்றனர் பசுக்களைக் காப்பதும், பூஜிப்பதும் மிகவும் புண்ணியமான வழிபாடு என்று புராண சாஸ்திரங்கள் கூறுகின்றன.

மகாலக்ஷ்மியின் முழு சாந்நித்யம் பசுவிடம் உள்ளது "பசுக்கள் உபநிஷத்துக்களுக்குச் சமமானவைகள்! பசுக்களைக் கறப்பவன் ஸ்ரீ கிருஷ்ணன், அதாவது உபநிஷதசாரத்தை நமக்குக் கூறுவது, பலன்: கறநத பால் கீதை அந்தப் பாலைப் பருகுபவன் பண்டிதன் என்று கூறுவது கீதாமங்கள் சாஸனம்!

உழவர்கள் தங்கள் உழவுத் தொழிலுக்க உறுதுணையாக இருந்து அறுவடை செய்து புது அரிசி கிடைக்க வழிசெய்த மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் நாளாகப் பொங்கல் திருநாளைக் கொண்டாடுகின்றனர்.

கிராமங்களில் மாடுகளின் கழுத்திற் சலங்கை, கரும்பு, பணம், முதலியவற்றைக் கட்டி வெளியே அனுப்புவர் அதனை அவற்றிடம் இருந்து எடுப்பதனை வீர விளையாட்டாகச் சிறுவர்கள் செய்வார்கள்.

இப்போதும் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் காளை பிடிக்கும் வீர விளையாட்டினை (ஜல்லிக்கட்டு) நடத்துகின்றனர். அந்தக் காலத்தில் தன் வீட்டுக் காளையினை அடக்கி அதன் கழுத்தில் கட்டும் பரிசினை எடுக்கும் வீரனுக்குத் தம் குடும்பப் பெண்ணை மண முடிக்கும் வழக்கத்தினை வைத்திருந்ததாகவும் பல சான்றுகள் பலநூல்களில் உள்ளன.

அன்று காலையில் சுமங்கலிகள், வயது முதிர்ந்த சுமங்கலியிடம் புதிய மஞ்சளைக் கொடுத்து, ஆசி பெறுவர், ஆற்றங்கரையில் மஞ்சள் இலையில் பொங்கலை வைத்து தம் சகோதரர் வீடு நன்கு வாழ வேண்டுமென பிரார்த்தனை செய்வர்.

இதனைப் பெண்களுக்கான சிறப்புப் பண்டிகையாகக் கொண்டு பொங்கற் பானையிற் கட்டிய மஞ்சளை ஐந்து பெரியவர்களிடம் கொடுத்து தம் நெற்றியிலும் திருமாங்கல்யத்திலும் மும்முறைதேய்த்துக் கொள்வர். பெரியவர்கள் இல்லாவிடிற் கணவனிடம் கொடுத்துத் தேய்த்துக் கொள்வதுடன் வணங்கி ஆசியும் பெறுவர்.

* இந்துச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முக்தியின்பம் பெறும் பொருட்டேயாம்

* இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது, நமக்கு விளங்கியமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

* நம்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும் பொழுது செய்யா தொழிவையாகில் பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது.

# 03 தைப்பூசம்

தைமாதம் பூச நட்சத்திரத்தில் இதனைக் கொண்டாடுவர். பொதுவாக இது பௌர்ணமி நாளில் வரும். இந்நாளில் முருகன் திருத்தலங்களில் சிறப்புவழிபாடுகள் நடக்கும்.

தேவகுருவான பிரகஸ்பதியின் நினைவு நாள் என்றும் சிலர் கூறுவர். உலகில் நீரே முதலில் தோற்றுவிக்கப்பட்டது என்ற ஐதீகத்தைக் காட்ட அன்று பல ஆலயங்களிலும் தெப்ப உற்சவம் நடைபெறும்.

மார்கழி முதல் நாளில் மாலை போட்டுத் தினமும் இருவேளை குளித்து முருகனை வழிபட்டு வருவர். தைப்பூச நாளில் அறுபடை முருகன் கோவிலில் ஏதாவது ஒன்றுக்கு நடந்தே சென்று வழிபாடு செய்வர். இவ்விழா குன்றக்குடி, பழனி, திருத்தணி முருகன் கோவில்களில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன.

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கடவுள் இராமலிங்க வள்ள லார், புனர்பூச நட்சத்திரத்தில் முக்தி அன்னதானமும் நடைபெறுகின்றது.

திருவிடைமருதூரில் அன்று பிரம்மோற்சவம் நடைபெறும். அசுவமேத பிரகாரத்தை வலம் வந்தால் பிரம்மஹத்தி தோஷம் அகலும். சித்த சுவாதீனம் இல்லாதவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் இக்கோவிலை வழிபாட்டால் நலம் பெறுவர்.

## 04 வைரவர் விரதம்

தைமாதம் முதல் செவ்வாய்க்கிழமையன்றும், சித்திரை மாதம் பரணி நட்சத்திரத்தன்றும், ஐப்பசி மாதம் பரணி நட்சத்திரத்தன்றும் வைரவக் கடவுளுக்குகந்த நாளாகும். தினசரிக் கடமைகளை முடித்து வைரவர் கடவுளை மனத்தில் நினைத்து வழிபட்டு ஒரு பொழுது மட்டும் இரவில் உணவு அருந்தி, மறுநாள் காலை தினசரிக் கடமைகளை முடித்துஆலயம் சென்று வழிபடல் வேண்டும். அடியவர்களுக்கு அமுது அளித்தலும் வேண்டும். இவ்விரதத்தினைக் கடைப்பிடிப்பவர்கள் முக்தி அடைவர்.

## 05 மகா சிவராத்திரி



மாசி மாதம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தி திதியன்று அமாவாசைக்கு முதல் நாள் சிவராத்திரி கொண்டாடப் பெறுகின்றது. அன்று சிவபெருமானை வழிபடுவோருக்கு எல்லா நலன்களும் கிட்டும். இது பற்றிப் பல புராணக்கதைகள் உள்ளன. உமாதேவி விளையாட்டாகச் சிவபெருமான் கண்களைத் தன் திருக்கைகளினால் மூட உலக மெல்லாம் இருள் சூழ்ந்தது. அந்நாளே சிவராத்திரி என்கிறார்கள்.

உமாதேவி பயந்து நடுங்கி கைகளை எடுத்துவிட்டார். தேவியின் பயத்திணைப் போக்க சிவன் நெருப்பு ஒளியினை குளிர் நிலவாக மாற்றி அம்பிகையை ஆட்கொண்டார்.

பாற்கடலில் விளைந்த அமுதத்தினை உலகைக் காப்பதற்காகச் சிவபெருமான் உண்ணவே பெருமானுக்கு நஞ்சு ஏதும் கேடு விளை

விக்குமோ என்று அஞ்சி தேவர்கள் இரவு முழுவதும் விழித்து இருந்த நாளே சிவராத்திரி என்பர்.

பிரம்மனும் திருமாலும் தங்களுக்குள் யார் பெரியவர் எனப் போரிட, அதனால் ஆணவ இருள் சூழ்ந்ததாகவும், அந்த இருளினைக் கண்டு விண்ணிலுள்ள தேவர்கள் அஞ்சவே அவர்களைக் காக்க சிவபெருமான் இலிங்கமாக முளைத்து சுடர்விட்டு அனைவருக்கும் அறிவூட்டிய நாளே சிவன் ராத்திரி என்றும் கூறுவர்.

சிவராத்திரி மகிமை பற்றி ஒரு புராணக்கதை உண்டு. ஒரு முறை ஒரு வேடுவனைப் புலி ஒன்று துரத்தவே அவ்வேடுவன் அஞ்சி நடுங்கியவாறு ஒரு வில்வ மரத்தின் மீது ஏறிக் கொண்டான். புலியும் மரத்தடியிலேயேபடுத்தது. வேடுவன் கீழே இறங்கட்டும் எனப் புலி காத்திருப்பதைக் கண்ட வேடுவன் இரவில் தாம் தூங்கிக் கீழே விழுந்தால் புலிக்கு இரையாகி விடுவோமென அஞ்சினான். தூக்கம் வராமலிருக்க, தாம் இருந்த மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக் கீழே போடலானான். அந்த வில்வமரத்தின் இலைகள் மரத்தின் அடியில் இருந்த இலிங்கத்தின் மேல் அர்ச்சனை செய்தது போல் இரவு முழுவதும் தொடர்ந்து விழுந்து கொண்டே இருந்தது.

அன்றைய தின் சிவராத்திரி. அநத வேடுவன் இரவெல்லாம் கண்விழித்து அறிந்தோ, அறியாமலோ சிவபூஜை செய்த காரணத்தால் அவனுக்கு மோக்ஷம் கிடைத்தது. சிவபெருமான் அந்த வேடுவன் முன்னாற் காட்சி அளித்தார். பெருமானார் கருணை கொண்டு அந்த வேடுவனின் பாவங்களை நீக்கி அவனுக்கு முக்தி அளித்தார்.

சிவராத்திரி முழுவதும் தூங்காமல் இருந்து சிவபெருமானை வணங்குவர். இரவில் நான்கு காலப்பூஜை அமைத்து சிறப்பாக வழிபடுவர். இதேபோல் திருமாலை இரவு முழுவதும் தூங்காது இருந்து பூஜை செய்வதனை வைகுண்ட ஏகாதசி என்பர்.

சிவராத்திரி, நவராத்திரி என்னும் இரு பண்டிகைகள் மட்டுமே "ராத்திரி" என்னும் அடைமொழியில் உள்ளது. இதில் ஒன்று சிவனுக்கும் மற்றது சக்திக்கும் உரியதாகும். நித்ய சிவராத்திரி, பக்ஷ சிவராத்திரி, மாச சிவராத்திரி, யோக சிவராத்திரி மகா சிவராத்திரி என ஐவகைப்படும். இந்த சிவனுக்கு உகந்த ராத்திரிகளில் விரதம் இருந்து சிவனை வழிபட்டால் இவ்வுலக சுகமும் கைலாசமும் கிடைக்கும் வைஷ்ணவர்களும் இவ்விரதத்தை இருக்க வேண்டும் எனக்கருட புராணமும் கூறுகிறது.

பகல் முழுவதும் உபவாசம் இருந்து சிவாலயத்தில் நெய்விளக்கு ஏற்றி நான்கு காலத்திலும் சிவபூஜை செய்து ஐந்தெழுத்தை உச்சரித்து மறுநாள் காலை பாராயணம் செய்ய வேண்டும். பதினான்கு நாழிகைக்குமேல் முகூர்த்த காலம் தேர்ந்து சிவபஞ்சாக்கரம் ஜெபித்தல் சிறப்பு. சிவராத்திரியன்று ஒரு பஞ்சாட்சரம் உச்சரித்தால், ஏனைய நாட்களில் 100 பஞ்சாட்சரம் ஜெபித்த பலன் கிட்டும்.

# 06 மாசி மகம்

சந்திரன் சிம்ம ராசியில் மக நட்சத்திரத்தில் நுழையும் நாளில் மாசி மகம் விழா கொண்டாடப்பெறுகின்றது. இதுவும் முருகனுக்கு உகந்த நாள்

மாசி மகம் விரதம் இருப்பவர்கட்கு மறுபிறவி இல்லை. விரதம் ஏற்று அன்னதானம் செய்யும் பெண்களுக்கு ஆண்பிள்ளை பிறக்கும் என்கிறார்கள்.

கும்பகோணம் ஏகாம்பரேசர் கோதண்டபாணி திருக்கோவில் களிற் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமகம் என்னும் விழா கொண் டாடப்படுகின்றது. இவ்விழாவினைக்காண இந்தியா முழுவதும் இருந்து பக்தர்களும் பூர்வ ஜன்மப் பாவங்களும் நீங்கும் என்பது ஐதீகம் வட நாட்டில் இதனை "கும்பமேளா" என்பர்.

நூல் திசையோர் பரவு திருக்கு மூக்கு, எனச் சேக்கிழார் புகழ்ந்த கும்பகோணம் வடமொழியில் பாஸ்கரக்ஷேத்திரம் என்ற பெயர் பெற்றது. இத் தலம் மூர்த்தி, தலம் தீர்த்தம் என்னும் மூன்று சிறப்புக்களையும் கொண்டது. இதனை அமுத தீர்த்தம், கன்னியா தீர்த்தம் என்றும் கூறுவதுண்டு.

மகாமகம் புண்ணிய காலங்களிற் சிறந்தது. உலகைப் படைக்க உலகப் பொருள்களின் சாரத்தை ஒரு கும்பத்தில் வைக்க, அது நீரில் மிதந்து வரும் போது இறைவன் கும்பத்தை அம்பால் அடிக்க, கும்பத்தின் மூக்கு (கோணம்) உடைந்து வீழ்ந்தது. அந்த இடமே கும்பகோணம் என்னும் திருத்தலம்எனப் பெயர் பெற்றது.

ஒன்பது புண்ணிய நதிகள் மகாமகத்தன்று மாமாங்கக் குளத்தில் மூழ்கித் தங்கள் பாவங்களைக் களைவதாக ஐதீகம் இங்குள்ள நாகேஸ் வரர் திருக்கோயில் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

காசி செய்த பாவம் கும்பகோணத்தில் நீங்கும். கும்பகோணத்தில் செய்த பாவம் கும்பகோணத்திலேயே நீங்கும் என்று ஒரு ஸ்லோகம் கூறுகிறது.

"வாரணா ஸ்யாம் க்ருதம் பாபம்
கும்பகோணே விநயஸ் யதி
கும்பகோணே க்ருதம் பாபம்
கும்ப கோணே விநயஸ்யதி"

## 07 மாமாங்கம்

பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை கும்ப கோணத்தில் நடைபெறும். கும்பகோணத்தின் மகாமகம் குளம் தீர்த்தம் உள்ளது.

ஞானாக்கினி தேவனுக்கு நிலைத்த இடம் கும்பகோணம் ஆகும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஞானாக்கினி தேவனால் நிர்மயமான நீர்ப்பெருக்கு உண்டாக்கப்படுகின்றது.

கோதாவரி, காவிரி, யமுனை, கங்கை, சரஸ்வதி, சரயு, புஷ்கரணி, நருமதை, குமரி ஆகிய ஒன்பது நதிகளில் மக்கள் தம் பாவங்களைப் போக்க நீராடுவர்.

இவ்வொன்பது நதிகளும் மகாமகத்தன்று மாமாங்கம் குளத்தில் வந்து மூழ்கித் தங்கள் பாவங்களைப் போக்கும் என்பது வழக்கம். மகாமகப் புண்ணிய நாளன்று இக்குளத்தில் தங்குவதனைத் தலபுராணங்கள் கூறுகின்றன. மாமாங்கத் திருநாளன்று லட்சக்கணக் கான மக்கள் நாடு முழுவதும் இருந்து வந்து தீர்த்தமாடுகின்றனர்.

## 08 காரடையான் நோன்பு



இதனைப் பெண்கள் மட்டுமே மேற்கொள்வர். இதனால் மாங்கல்ய பலம் பெருகும். மாசி மாதம் ஏகாதசியை ஒட்டிவரும் இதனைக் காமாக்ஷி நோன்பு என்றும் கூறுவர். சாவித்திரி தனது கணவன் சத்தியவான். நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும் என்று இந் நோன்பினை வழிப்பட்டாள்; வெற்றியும் கண்டாள்.

காஞ்சி காமாக்ஷி கம்பா நதி தீரத்தில் ஈசனை மண்ணினால் இலிங்கம் செய்து பூஜித்தாள். அப்பொழுது பிரளயத்திலிருந்து

சிவலிங்கத்தைக் காப்பாற்ற இந்த விரதத்தைச் செய்ததால் ஈசன் விரத மகிமையால் அம்பாளுக்குத் தரிசனம் தந்து திருக்கல்யாணம் செய்து கொண்டார். காமாக்ஷி ஏகாம்பரேசுரர் திருக்கல்யாண வைபவத்தால் இந்த விரதத்திற்குக் காமாக்ஷி விரதம் என்று பெயர்.

கலசம் ஒன்றில் தேங்காயுடன் மாவிலைகள் சந்தனம், குங்குமம், பூஆகியவற்றை வைத்து மஞ்சட் கயிற்றினால் கலசத்தின் கழுத்தில் கட்டிவிட வேண்டும்.

அதிகாலையில் எழுந்து குளித்து, கார அடை செய்து பழம், பொரி முதலானவற்றினைக் கலசத்தின் முன் வைத்து தீபாராதனை செய்து வழிபட வேண்டும்.

மாசிக் கயிறு பாசி படியும்" என்பது வழக்கு. இப்பண்டிகையில் திருமாங்கல்ய சரடினை மாற்றிக் கொள்ள வேண்டும்.

கார அடை, குங்குமம், மஞ்சள் ரவிக்கைத் துண்டு ஆகியவற்றைச் சுமங்கலிப் பெண்களுக்குத் தர வேண்டும். மஞ்சட் கயிற்றைக் கழுத்திற் கட்டிக்கொள்ள வேண்டும். உபநயனம் செய்து கொள்வதும், நோன்புக் கயிறு அணிவதும் நன்மை தரும்.

# 09 பங்குனி உத்திரம்



பங்குனி மாதத்தில் உத்திர நட்சத்திரம் பௌர்ணமியில் வரும் நாளில் இவ்விரதம் கொண்டாடப் பெறுகின்றது. முருகனுக்கும், சிவபெருமானுக்கும் இனிமையை நிலைபெறச் செய்யும் விரதமாகும்.

சந்திரன் உத்திர நட்சத்திரத்தில் இருப்பதனால் இவ்விழாவுக்கு இப்பெயர் வந்தது. இதனைக் கல்யாண விரதம் என்றும் கூறுவர். இந்நாளில் மீனாட்சி தேவி சுந்தரேசர் கல்யாணம் மதுரையில் நடந்தது.சீதா கல்யாணமும் இந்நாளிலேயே நடந்தது. இத்தினத்திலே தான் பார்வதி பரமசிவனை மணந்தார்.

திருமகள் இவ்விரத்தினைக் கடைப்பிடித்து விஷ்ணுவின் திரு மார்பில் வீற்றிருக்கும் பேறு பெற்றார். 48 ஆண்டுகள் பங்குனி உத்திரத் தன்று விரதம் இருப்பவர்கட்கு மறுபிறவி அருட் பிறவியாக அமையும். இந்திரன் இந்திராணியைப் பெற்றதும், பிரம்மன் சரஸ்வதியை நாவில் வைத்ததும், சந்திரன் அழகுமிக்க இருபத்தேழு கன்னியரை மனைவியாகக் கொண்டதும் இவ்விரத மகிமையினாலேயே எனில் இதன் மகிமையினை மேலும் விளக்க வேண்டுமா?

அன்று சுவாமி அருகிலுள்ள கடல் ஏரி, தடாகத்தில் தீர்த்தம் கொடுப்பார். அப்போது அதில் நீராடினால் யாகம் முடிந்து அவபிருத ஸ்நனம் செய்த புண்ணியம் கிடைக்கும். மேலும் பங்குனி மாத திங்கட்கிழமைகளிற் பங்குனித் திங்கள் என்னும் விழா கண்ணகியம்மன கோவில்களிற் கொண்டாடப் பெறுகின்றது.

# 10 ஸ்ரீராம் நவமி



இராமபிரான் அவதரித்த நாளே ஸ்ரீராமநவமி என வழங்குகின்றோம். இது புனர்பூச நட்சத்திரம் உச்சத்திலிருக்கும் சுக்கில பட்சத்தின் ஒன்பதாம் நாளில் கொண்டாடப்பெறும். ஸ்ரீ இராம பிரானை அன்று விரதம் இருந்து வழிபடுபவர்கட்கு ஆஞ்சநேயரின் அருள் கிட்டும் என்பது ஐதீகம் எலுமிச்சை புளி, வெல்லம் கொண்டு தயாரிக்கும் பானகமும் மோரில் தயாரித்த பானகமும் செய்வர்.

இராமரை துளசி மாலை அணிந்து வழிபடுவது சிறப்பாகும். சுக்லப் பிரதமை முதல் நவமி வரை ஒன்பது நாளும் ஸ்ரீ இராமாயணம் பாராயணம் செய்து இராமர் பூசை செய்வது கர்மோத்ஸலம்.

ஸ்ரீராமநாம மகிமையால் நமக்கு சர்வகாரிய சித்தி உண்டாகும். மஹான்போதேந்திர சுவாமிகள் இரண்டு லக்ஷம் சுலோகங்கள் அடங்கிய பதினாறு கிரந்தங்களை எழுதியுள்ளார். அக்கிரந்தங்கள் முழுக்க முழுக்க ஸ்ரீ ராம நாம மகிமையைச் சொல்லுகிறது.

இராமன் பரமாத்மா என்றால், அவனது திருநாமம் ஜீவாத்மா! அவனது நாமத்தை ஜெபிப்போர்க்கு ஸ்ரீராம நாமத்தைக் கொண்டாடுபவர்க்குச் சகல ஐசுவரியங்களும் பொங்கிப் பெருகும்.

# 11 சித்திரை வருடப்பிறப்பு

பூத்துக்குலுங்கும் புதுமலர்க்கொத்துப் போல் ஆறாறு பருவங்களைக் கொண்டு புத்தாண்டின் முதற் கோபுரவாயிலாக விளங்குவது சித்திரை திங்கள்.

சித்திரை வருடபிறப்பு என்றும் சித்திரை விஷு என்றும் வழங்கும் சித்திரை மாதம் முதல் நாளில் சூரியன் இராசிகளில் முதலாவதான மேஷ ராசியில் உதயமாகின்றார். அதிகாலையில் நீராடிப் புத்தாடை பூண்டு வழிபாடு செய்து. பெரியோர்களிடம் நல்லாசி பெறுவர். இந்நாளில் இறைவனை மனமொழி மெய்களால் வணங்கித் துதித்தால் அந்த வருடம் முழுவதும் நினைத்த காரியம் நிறைவேறும். நல்வாழ்வும் இலட்சுமி அருளும் கிட்டும் என்பது ஆன்றோர்களின் அருள்வாக்கு - அமுதவாக்கு!

சித்திரை மாதத்தை சைத்ரா என்றும் சைத்ர வருடம் என்றும் கூறுவர். சைத்ர வருடம் அன்று பிரம்மதேவன் இந்தப் புவனத்தைப் படைத்தார் என்பது புராணம்!

வருடம் என்னும் காலதேவதைக்கு 12 மாதமும் உடல் உறுப்புகளாகும் நவநாயகர்களான 9 கிரகங்களும் உலகை ஆள்கின்றன.

திதி வார நட்சத்திர, யோக கர்ணம் எனும் 5 அங்கங்கங்களை விளக்குவது பஞ்சாங்கம் நன்மையை விருத்தி செய்வது திதி ஆயளை வளர்பது வாரம்: பாவத்தைப் போக்குவது நட்சத்திரம்! ரோகத்தை போக்குவது யோகம்! வெற்றிகளைத் தருவது கர்ணம்! பல ஆலயங்களில் தினமும் பஞ்சாங்கப் படனம் நடத்துவர். தினமும் இல்லாவிடினும் வருடப்பிறப்பன்றாவது பஞ்சாங்கத்திற் பலன் பார்க்க வேண்டும் என்பது ஐதீகம்.

கேரளத்தில் சித்திரை வருடப்பிறப்பினை கேரள நாட்டவர் விஷுக்கனிகாணல் என்று கொண்டாடுவர். முதல் நாள் இரவு பூஜை அறையினைத் துப்பரவு செய்து திருவிளக்கின் முன்கோலமிட்டு பூ பழம்,

வெற்றிலை பாக்கு அணிகலன்கள் முகம் பார்க்கும் கண்ணாடி போன்றவற்றை வைப்பர்.

புத்தாண்டு தினத்தன்று அதிகாலை வீட்டில் உள்ள பெரியவர் ஒருவர் எழுந்து குளித்து பூஜை அறையில் திருவிளக்கு ஏற்றி வழிபாடு செய்தபின் வீட்டிலுள்ளோர் அனைவரையும் பூஜை அறைக்கு அழைத்து வருவார். முதலிற் கடவுளரின் திருவுருவப்படங்களையும், ஏற்றிய திருவிளக்கினையும், மங்கலப் பொருட்களையும் பார்ப்பதனால் அந்த ஆண்டு முழுவதும் மகிழ்ச்சி தரும் என்பது நம்பிக்கை. இதனை விஷுக்கனி காணல் என்பர். இறை திருவுருவப்படங்களின் முன்னால் வைத்து பெரியோர்கள் கைவிஷேடம் வழங்குவார்கள். அவர்களைப் பணிந்து ஆசி பெற்று அதனைப் பெற்றுக்கொள்வர்.

அன்று விருந்திற்கு அறுசுவை உணவு செய்வர். அன்றைய சமையலில் வேப்பம்பூப் பச்சடியும், மாங்காப் பச்சடியும் செய்வர். வேம்பம்பூ மருத்துவ குணம் பெற்றது. அன்று பானக நீர் மோர்., பருப்பு வடை போன்றவற்றையம் செய்வர். புதுவருடப் பங்சாங்கத்திற்கு விபூதி. சந்தனம் குங்குமம் பொட்டுஇட்டு, வழிபாட்டில் வைத்து வணங்கி வழிபாடு முடிந்ததும் பஞ்சாங்கத்தினை எடுத்துப் படிப்பார்கள்.

# 12 சித்திரா பௌர்ணமி

சித்திரை மாதம் பௌர்ணமி அன்றே சந்திரன் முழு வலிமை பெற்று முழுக் கிரணத்தையும் சித்திரையின் கிரணத்தோடு சேர்த்து பூமிக்கு அளிக்கிறான். இதுபோல் வேறு எந்த நாளிலும் ஏற்படா தாகையினால் இந்நாள் சிறப்புடைய தாகும்.

சித்திரை மாதம் சித்திரை நாளில் சித்திர புத்தரனார் தோன்றினார் எனவே அன்று கொண்டாடப்பெறும் விரதம் சித்திரகுப்த விரதம் என்பர். அவரவர்களின் பாவ புண்ணியங்களைக் கணக்கெடுத்துக் கொடுக்கும் பணி சித்திரகுப்த நாயனாரின் பணி என்று இந்துமத சாத்திரங்கள் கூறுகின்றன. யமதர்மராஜா மக்கள் அவரவர் செய்யும் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப நீதி வழங்குவார்.

நாம் செய்யும் குற்றங்களைச் சித்திரம் போல் இரகசியமாகத் தம் மனதில் நிலை நிறுத்திக் கொள்வதினால் இவருக்குச் சித்திர குப்தன் எனப் பெயர் வந்ததாகவும் கூறுவர். இந்நாளில் இவரை வழிபட்டு எமன் பயத்திலிருந்து மீளலாம் என்பர். காஞ்புரத்திற் சித்திரகுப்தருக்குத் தனி ஆலயமும் கல் விக்கிரகமும், உலோக விக்கிரகம் ஒன்றும் உள்ளது. இவ் உருவச் சிலையின் ஒரு கையில் ஏடும் மறுகையில் எழுத்தாணியும் காணப்பெறுகின்றன. சித்திரா பௌர்ணமி அன்று இந்திரன் வந்து பூஜிப்பதாக ஐதீகம்.

சித்திர குப்தனைப் போல மாவுக் கோலமிட்டு அவர்கையீல் ஏடும் எழுத்தாணியும் அமைத்துப் பூஜை செய்வர். உப்பு பால் மோர் சேர்க்காமற் பகலில் மட்டும் உண்டு விரதம் இருக்கவேண்டும். சித்திரா பௌர்ணமி மதுரையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். தேவேந்திரன் பல புண்ணிய தலங்களை எல்லாம் தரிசித்துவிட்டு ஒரு காட்டை அடைந்தான். அவ்விடத்தை அடைந்ததும். அமரேந்திரன் பிணி நீங்கியதும் நோயாளிக்குக் கிடைக்கும் உணர்ச்சியை அடைந்தான் அமரேந்திரன் ஆச்சரியப்பட்டான். தேவேந்திரன் அவ்விடததின் மகிமைக்குக் காரணம் என்ன என்று சுற்றிலும் பார்த்தான். அங்கு

தாமரைத் தடாகத்தில் இலிங்கம் ஒன்றினைக் கண்டான். அதனாற்றான் தன் பாவப்பிணிசனாகிய விசுவதர்மாவை அழைத்து அங்கு ஒரு அழகிய கோவில் கட்டினான். ஈஸ்வரிக்கும் தனிச்சன்னிதி ஒன்றினை அருகே அமைத்தான். வழிபாடு செய்ய மலர்கள் இல்லாததால் குளத்திற் பொற்றாமரையை வரவழைத்து இலிங்கத்தை வழிபட்டான் அமேரந்திரன் சிவனை வழிபட்ட நன்நாள் சித்திரா பௌர்ணமியாகும். இன்றும் சித்திரா பௌர்ணமியன்று இந்திரன் இலிங்க வழிபாடு செய்ய வருகிறார் என்பது வரலாறு! இந்திரனால் நிறுவப்பட்ட அவ்வனமே கூடல் மாநகரம் எனப்படும் மதுரையாகும்.

திருமாலிருஞ் சோலையிலிருந்து கள்ளழகர் புறப்பட்டு மதுரை வந்து தம் சகோதரி மீனாட்சியின் திருமணத்தைப் பார்க்க வந்ததாகவும், அவர் வருவதற்குள் திருமணம் நடைபெற்று விட்டதால் வந்தவர் திரும்பிப் போய் விட்டதாகவும் சாத்திரங்கள் கூறுகின்றன. இதுவும் சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழாவாகும்.

சித்திரா பௌர்ணமி விழா எட்டிக்குடி முருகன் ஆலயத்திலும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது. சித்திரா பௌர்ணமியில் ஆதி சங்கரர் ஜயந்தியும், ராமானுஜர் சாத்துமுறையும் சித்திர குப்தர் திருக்கல்யாணமும் ஸ்ரீ ரங்கத்தில் கஜேந்திர மோட்சமும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன.

## 13 உமா சுக்கிரவார விரதம்



உமாதேவியின் அருள் வேண்டி இருக்கும் விரமாகும். இவ்விரதத்தினைச்சுக்கிரன் முதன் முதலில் அனுட்டித்துத் தன் பெயரால் இவ்விரதம் வழங்க வேண்டுமென வேண்டினான். அதுமுதல் தேவியின் வரத்தினால் வெள்ளிக்கிழமை சுக்கிரவார மென்னும் பெயர் பெற்றது.

சித்திரை மாதம் பிரதமைத்திதியுடன் கூடிய சுக்கிர வாரத்திலே (வெள்ளி) உமாதேவியைத் தியானித்தல் வேண்டும். நீராடி, வேதமந்திரம் தவறாது கும்பத்திலே நீர் நிறைத்து உமாதேவி அக்கும்பத்தில் எழுந்தருளியிருப்பதாக எண்ணி வழிபட வேண்டும்.

ஆலயதரிசனம் செய்தலும் வேண்டும். அன்று பால் பழம் மட்டும் சாப்பிடுவது உத்தமம். ஐப்பசி மாத நட்சத்திரத்தில் இந்த விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

*"அம்பிகையைச் சரண் புகுந்தால்*
*அதிகவரம் பெறலாம்"*

- சுப்பிரமணிய பாரதியார் -

## 14 வைகாசி விசாகம்



வைகாசி மாதம் இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்றான விசாக நட்சத்திரத்தில் இவ்விழா கொண்டாடப் படுகின்றது. இந்நாளிற்றான் ஆறுமுகப் பெருமான் அவதரித்தார். இந்நாளில் எல்லா முருகன் திருநாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் சூரியன் குமரனை வழிபடுவதாக ஐதீகம் அன்று முருகனை வழிபடுபவர்கட்கு புத்திரி பாக்கியம் கிடைக்கும்.

வைகாசி விசாகம் திருச்செந்தூரில் முருகனுக்கு பத்துநாட்கள் சிறப்பான விழா நடைபெறுகின்றது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆழ்வார் திருநகர் என்னும் வைணவத் தலத்திலும் இந்நாள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. பன்னிரு ஆழ்வார்களின் தலைவராம் நம்மாழ்வார் அவதாரத் தலம் ஆழ்வார் திருநகரி. இவர் பிறந்ததும் விசாக நாளிற்றான்.

ஆண்டு முழுமையும் சந்தனக்காப்பிலிருக்கும் அகோபிலம் நரசிங்கமூர்த்தி, இந்நாளில் மட்டும் சந்தனக் காப்பினைக் களைந்து பக்தர்களுக்கு அருட்காட்சி தருகிறார். வைகாசி விசாகத்தினை ஒட்டி காஞ்சி வரதராஜப் பெருமாள் கருட சேவை நடைபெறும், ஸ்ரீரங்கத்தில் வசந்த உற்சவம் நடைபெறும் புத்தபெருமான் அவதரித்ததும் புத்தரானதும் நிருவாணமடைந்ததும் இதே திதியிற்றான் என்றும் கூறுகின்றனர். யமதர்மன் அவதரித்த நாளும் இதுவே என்பர்.

# 15 ஆனி உத்திரம்



நடராசப் பெருமானுக்கு ஆண்டில் ஆறுமுறை திருமுழுக்கு நடைபெறும். அதில் மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று நடைபெறும் முழுக்கு மிகவும் சிறப்பு வாய்ந்தது.

மனிதர்களுக்கு ஓர் ஆண்டாவது தேவர்கட்கு ஒரு நாளாகும். அதன்படி தேவர்கட்கு வைகறை மார்கழி மாதம், காலைப்பொழுது மாசி உச்சிக் காலம் சித்திரை மாலைக் காலம் ஆனி இரவு ஆவணி, அர்த்தசாமம் புரட்டாசி

ஆனிமாதம் உத்திர நட்சத்திரத்தில் நடக்கும் தரிசனம் ஆனி உத்திரம் எனவும் ஆனித் திருமஞ்சனம் எனவும் கூறப்படுகின்றது.

சிவாலயங்களில் ஆறுகாலப் பூசை நடைபெறுகின்றன. அவை இந்த ஆறு அபிஷேகங்களையும் குறிப்பதாகும்.

## 16 சாவித்திரி விரதம்

ஆனி மாதம் பௌர்ணமியன்று அனுஷ்டிக்கப்படும் ஒரு முக்கியமான விரதமாகும். தேவியின் அம்சத்தால் அசுவபதி மகாராஜாவின் மகளாகத் தோன்றியவள் சாவித்திரி! அற்ப ஆயுள் உடையவன் என்பதை அறிந்தும் சத்தியவானையே மணந்தாள். சாவித்திரி, விரதம் மேற்கொண்டு யமனிடமிருந்து தம்பதியைக் காப்பாற்றினாள். இது காரணம் பற்றியே இந்த விரதம் சாவித்திரி விரதம் என்று பெயர் பெற்றது. இவ்விரதம் மேற்கொள்பவர்கள் சகல பாக்கியங்களும் புத்திர பௌத்ர பாக்கியம் செல்வம் பெற்று எமபயமின்றி நீடுவாழ்வார்! என்பது உண்மை!

## 17 ஹரிசயன ஏகாதசி



இது ஆனி மாதம் வரும் ஏகாதசி ஆகும். ஸ்ரீமந் நாராயணன் சயனம் மேற்கொள்ளும் சுக்ல ஏகாதசி இதுவாகும்.

ஆவணி மாதம் சுக்ல ஏகாதசியிற் படுக்கையிற் புரளுவது பரிவர்த்தன சுக்ல ஏகாதசி, ஐப்பசி மாதம் எழும் நாள் வாயுத்தான ஏகாதசி எனப்படும். எல்லா ஏகாதசிகளம் புண்ணியத்தைத் தருவதாயினும் பகவான் நாராயணனுக்கு உகந்த இம்மூன்று ஏகாதசிகளையும் அனுஷ்டிப்பது மிகுந்த புண்ணியம் தருவதாகும்.

## 18 ஆடி அமாவாசை

பொதுவாகவே இந்து மதத்தவர்கள் அனைவரும் அமாவாசையினைச் சிறப்பாக எடுப்பதுண்டு. அதிலும் ஆடிமாதம் வரும் அமாவாசை சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் ஒரு முக்கிய நாளாகும். பிதுர் வழிபாட்டைக்குறிக்கும் புண்ணிய சிரார்த்த தினம் இது. சூரியனும் சந்திரனும் ஒரே பாதையிற் பூமிக்கு நேராக வரும் போது அமாவாசைத் திதி உண்டாகும். அமாவாசைக்கு அடுத்த பிரதமை முதல், பௌர்ணமி இறுதியாகவுள்ள 15 திதிகளும் ஒரு பக்கம் (சுக்கிலபக்ஷம் - வளர்பிறை) பௌர்ணமிக்கு அடுத்த பிரதமை முதல் அமாவாசை இறுதியகாவுள்ள 15 திதிகளம் அபரபக்ஷம் (கிருஞ்ணபக்ஷம் - தேய்பிறை) என்றும் வழங்குவர்.

சூரியனும் சந்திரனும் ஒன்றுபட்டுப் பூமிக்கு ஒரே நேர்படும் சமயம் இதற்குச் சாலச் சிறந்ததாகும். ஒவ்வொரு அமாவாசையும் நல்லது எனினும் ஆடி அமாவாசை மிகவும் சிறந்தது சூரியனுக்கு அப்பாலுள்ள இடம் பிதிர்க்குரியதாகும். தெற்கு நோக்கி சஞ்சாரம் செய்ய ஆரம்பிக்கும் நாளான ஆடி அமாவாசை பிதிர் தருப்பணத்திற்கு மிகவும் சிறப்புக் காலமாகும். உயிர்களை நற்பதவி அடையச் செய்வதற்கும் சிரார்த்தம் அவசியம்.

# 19 ஆடிப்பூரம்

ஆடி மாதம் கோடை வரும் போது சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் பயணம் தொடருவார் (உத்தராயண புண்ணிய காலம் முடிந்தது தெட்சணாயணம் ஆரம்பம்)

ஆடி மாதம் பூர நட்சத்திர தினம் உமாதேவிக்கு விசேஷமான தினம் உலக மக்களைக் காக்க சக்தி இவ்வுலகில் தோற்றம் அளித்தது ஆடிப்பூரம் நன்னாளிற்றான். ஆடிப்பூரம் வெள்ளிக்கிழமை வரின் சிறப்பாகும். அந்நாள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

சித்தர்களும் யோகிகளும் சக்தியின் அருள் பெற்று எல்லாச் சித்திகளையும் அடைய இந்நாளிற்றான் முயற்சிகளைத் தொடங்குவர் இந்நாளிற்றான் பூமிதேவியே ஆண்டாளாக இவ்வுலகில் அவதரித்தார்! ஸ்ரீவில்லிபுத்தூரில் இப்பூரவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

ஆடிமாதம் பூரநட்சத்தில் அம்பிகை உருதுவான தாகவும் கொள் ளப்படுகின்றது. இதனால் அன்றைய தினம் ஆலங்களில் ருதுசோபன நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. ஆடிப்பூர விரதம் அனஷ்டிப்பதனால் துர்க்கை அம்மனின் பரிபூரண அருளைப் பெற்றுய்யலாம்.

*"முக்கண்ணியைத் தொழுவார்க்*
*கொரு தீங்கில்லையே!"*

# 20 வரலட்சுமி விரதம்



வரங்களைக் கொடுக்கும் தாயாகிய லட்சுமியைக் குறித்து நோக்கப்படும் நோன்பு வரலட்சுமி நோன்பு என்னும் வரலட்சுமி விரதம் ஆகும். இதனைத் தமிழர்கள் ஒரு சிலரும் தெலுங்குப் பெண்களில் அதிகப் பேரும் கொண்டாடுகின்றனர்.

ஆடிமாதம் சுக்கில பட்சக் கடைசி வெள்ளிக்கிழமை கொண்டாடப்படும் எட்டுவகைச் செல்வத்திற்கு அதிபதியானவர் லட்சுமி தேவி. அதிகாலையில் எழுந்த குளித்து நடு வீட்டிற் பூசை செய்யவேண்டும். வழிபாட்டு அறையில் அல்லது கூடத்திற் கோலமிட்டு கிழக்கு நோக்கி மேடை அமைக்கவேண்டும் அல்லது பலகை போட வேண்டும் அதில் நெல் பரப்பி அதன் மேல் ஒரு தட்டினை வைத்தல் வேண்டும். தட்டில் அரிசி பரப்பி வைக்கவேண்டும். குடத்தின் மேல் மாவிலை வைத்து தேங்காய் வைக்க வேண்டும். குடத்திற்கு விபூதி, சந்தனம் குங்குமம் இட்டு பூச்சூட்டி அதன் பின்பக்கம் வரலெட்சுமி படம் அல்லது சிலை வைக்க வேண்டும்.

கலசத்தின் முன்பக்கம் தேங்காய், பழம் பூ வெற்றிலை பாக்குப் படைப்பதுடன் தேவையான அளவு நோன்புக் கயிற்றையும் வைத்து வழிபாடு செய்வது வழக்கம். நெய் விளக்கு ஏற்றி லட்சுமி தோத்திரங்களைத் துதித்து தீப வழிபாடு செய்தல் வேண்டும். நோன்புக் கயிறுகளைக் கன்னிப் பெண்களுக்குப் சுமங்கலிப் பெண்கள் கட்டிவிடுதல் வேண்டும் இதனால் கன்னிப்பெண்களுக்குச் சிறந்த கணவரும் விரைவில் திருமணமும் கிட்டுவதுடன் சுமங்கலிப் பெண்களுக்குத் திருமாங்கல்யப் பலமும் கிட்டும்.

# 21 நாக பஞ்சமி

இவ்விரதம் ஆடிமாதம் சுக்லபக்ஷ பஞ்சமியில் இருக்க வேண்டும் பகவான் நாராயணன் அனந்தன் என்னும் நாகமாக இருந்து பூமியைக் காக்கிறார். இவ்விரத நாளன்று புற்றக்குப் பால் ஊற்றி நாகங்களை வணங்கினால் நன்மை உண்டாகும்.

மக்கட்பேறு வேண்டி இவ்விரதம் இந்து. நாக பிரதிஷ்டை செய்தாற் பலன்கிட்டும் இவ்வாறு பிறக்கும் குழந்தைக்கட்கு நாகசாமி, நாகராஜன் நாகலட்சுமி என்று பெயர் இடுவர். ஸர்ப்பப்பலி என்னும் பூஜை 40 ஸம்ஸ் காரங்களில் ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளது. சிராவணப் பௌர்ணமியில் தொடங்கி தைப்பௌர்ணமியில் முடிக்க வேண்டும்.

இதேபோல் சுக்பலஞ்சமியிற் கருட பஞ்சமி விரதமும் ஆரம்பிக்க வேண்ம் இரண்டு விரதங்களையும் அனுஷ்டிப்போர் குடும்பத்திற் சுபீட்சம் நிலைக்கும். இரு பண்டிகைகளம் சகோதர்களின் சுபீட்சத்திற்காக சகோதரிகள் கொண்டாட வேண்டிய விரதங்களாகும். நாக சதுர்த்தி பற்றி ஒரு புராணக் கதை ஒன்று உண்டு. நாகபாம்பு கடித்து இறந்து போன ஐந்து சகோதரர்களக்காக சகோதரி நாக பஞ்சமி விரதம் இரந்து சகோதர்களை உயிர்பெறச் செய்தாள்.

## 22 விநாயகர் சதுர்த்தி



ஆவணி மாதம் சுக்ல பட்ச சதுர்த்தியில் விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படும். "வி" என்பதற்கு இல்லை என்னும் பொருள் உண்டு விநாயகர் என்றால் தனக்குமேல் நாயகன் (தலைவன்) இல்லை என்னும் பொருள் தருவதாகும்.

இப்பெருமான் யானை முகம் கொண்டவர். "உ" என்பது பிள்ளையார் சுழி நாம் எதனை எழுதத் தொடங்கினாலும் முதலிற் பிள்ளையார் சுழி இடாமல் தொடங்குவதில்லை.

எந்தச் செயலைத் தொடங்குவதாக இருந்தாலும் தடையின்றி (விக்கினமின்றி) நடைபெற விநாயகரை வழிபட்டு ஆரம்பிப்பார்கள். எனவே அவருக்கு விக்னேஷ்வரர் என்ற பெயரும் உண்டு

கோயில் இல்லா ஊரில்லை, பிள்ளையார் இல்லாத கோயிலில்லை. கோவில் மட்டுமின்றி அரசமரத்தடி, ஆறு, குளங்களின் கரை முச்சந்திகளிலும் விநாயகர் வீற்றிருப்பார். இந்தியாவில் மட்டுமன்றி கிழக்கு நாடுகளிலும் விநாயகர் வழிபாடு காணப்பெறுகின்றது.

வட இந்தியாவில் இதனை கணேஷ் பூஜை என்றழைக்கின்றனர். பத்து நாட்கள் சிறப்பாகக் கொண்டாடிக் கடைசி நாளன்று ஊர்வலமாக எடுத்தச் சென்று தண்ணீரிற் கரைப்பர்.

சதுர்த்தி அன்று களிமண்ணாற் செய்த பிள்ளையாரை வாங்கி வந்து எருக்கம் பூ, அறுகம் புல், காகிதக் குடை கொண்டு அலங்கரித்து வணங்குவர். மஞ்சள் சந்தனம், வெல்லம் பசுஞ்சாணம் கொண்டும் விநாயகர் செய்து வழிபடுவர். விஷ்ணு கோவில்களிற் பிள்ளையார் விஷ்வக்சேனர் சேனை முதலியார் என்றும் குறிக்கப் பெறுகின்றது.

விநாயகரை வணங்குபவர்கட்கு இடையூறுகளைப் போக்குவார் என்றும், வணங்காதவர்கட்கு இடையூறுகளை உண்டாக்குவார் என்றும் சாத்திரங்கள் கூறுகின்றன.

அவல் பொரி கடலை வெல்லம் பழம் தேங்காய் என் உருண்டை மோதகம் கொழுக்கட்டை அப்பம் சுண்டல் கொய்யப்பழம் விளாம்பழம் அறுகம்புல் முதலிய வற்றைப் படைத்து அன்று வழிபடுவர். அன்று விநாயகர் அகவல் கவசம் சகஸ்ரநாமம் காரிய சித்திமாலை படிப்பது சிறப்பாகும்.

தேவர்களையும் முனிவர்களையும் ஒரு காலத்தில் அசுரர்கள் துன்புறுத்தி தம் தலைவன் முன்பு வந்து தலையிற் குட்டி தோப்புக்கரணம் போட வேண்டுமென்று துன்புறுத்தினான் விநாயகர் அசுரர்களைக் கொன்று துன்பத்திலிருந்து தேவர்களை விடுவித்தார். அதுமுதல், பக்தர்கள் அசுரர்கள் முன் தலையிற்குட்டிப் போட்ட தோப்புக்கரணத்தை விநாயகர் முன் தோப்புக்கரணம் மகிழ்வுடன் போடச் செய்தார் விநாயகர் தவப்யாம் கர்ண என்பது தான் மருவி தோப்புக்கரணம் என்றானது.

பிள்ளையாருக்குத் தும்பைபூ செம்பருத்திப்பூ சங்கு புஷ்பம் எருக்கம்பூ மா இலை வில்வ இலை அருகம்புல் கொண்டு பூசிக்க வேண்டும் சதுர்த்தி அன்று மட்டுமே துளசியினாற் பூசிக்கலாம் பசும் சாணி புற்றுமண் எருக்கம்வேர் மஞ்சள் வெல்லம் சந்தனம் முதலியவற்றாற் பிள்ளையாராகப் பிடித்து வணங்குவர். சதுர்த்தியின் மறுநாள் காலை வழிபாடு செய்து, தயிர்ச்சாதம் நைவேத்தியம் செய்து முன்தினம் வாழிபாடு செய்து விநாயகரை எடுத்துச் சென்று ஆறு. குளம் கிணறு ஆகியவற்றிற் சேர்த்துவிட வேண்டும். சதுர்த்தி நாளில் மட்டும் சந்திரனைப் பார்க்கக்கூடாது. பார்ப்பவர்கள் துன்பமடைவர்.

ஒரு முறை தேவர்கள் கண்டுகளிக்கும் வகையில் விநாயகர் களிநடம் செய்தார். அவரது சரிந்த தொந்தியுடனம் மோதகக்கையுடனும் ஆடுவதனைக் கண்ட சந்திரன் சிரித்து விட்டார். இதைக்கண்ட விநாயகர் வெஞ்சினம் கொண்டு சந்திரனை யாரும் பார்க்க முடியாதபடி சாபித்து

விட்டார். அன்று முதல் சந்திரன் தேயத்தொடங்கினார். பின் மன்னிப்புக் கோரவே விநாயகர் மனமிரங்கி சாப விமோசனம் தந்தார். சுக்லபட்ச நான்காம் பிறையன்று உன்னைக் காண்பவர் வீண் அபவாதம் அடையட்டும் ஆவணி மாதம் சுக்லபட்ச சதுர்த்தியன்று என்னை வழிபடின் அபவாதம் நீங்கி நல்வாழ்வு பெறுவர் என அருளினார். பெண்கள் இந்நாளில் விரதம் இருந்து பிள்ளைப்பேறும் நலமான வாழ்வு பெறுவர்.

விநாயகரைப் பிரம்மச்சாரியாகவே கொண்டு வழிபடுகின்றனர். சித்திபுத்தி என்று இரு தேவியர் அவருக்கு உண்டு என்கிறது விநாயகர் புராணம் திருமால் தம் மகளிர் பன்னிருவரையும் விநாயகருக்குத் திருமணம் செய்து கொடுத்தார் தவத்தினால் சங்கிலிருந்து தோன்றிய வல்லபையையும் விநாயகர் மணந்து வல்லப கணபதி என்று கொண்டாடப்படுகிறார். சித்திபுத்தி விநாயகரை வழிபாடு செய்பவர்கட்கு க்ஷேமம் லாபம் என்ற பிள்ளைகளைத் தருவார்.

பார்வதேவி கணபதி மந்திரத்தை உபதேசியாகக் கேட்டு விநாயகரை உபசரித்து வந்தார். அதன் பயனாக விநாயகர் ஆறுதிருக்கரங்களோடு யானை முகத்தினராய் வெண்ணிறமான குழந்தையாக பாலச்சந்திர விநாகயர் என்ற திருநாமத்துடன் அவதரித்தார். அந்நாள் ஆவணி மாதம் வளர்பிறைச் சதுர்த்தித் திதி விசாக நட்சத்திரம் சோமவாரம் சிம்மலக்னம் கூடிய சுபவேளையாகும். அந்தத் திருநாளையே விநாயகர் சதுர்த்தி என்பர்.

விநாயகரை மஞ்சள் சந்தனம், பசுஞ்சாணம் பஞ்சலோகம் எருக்கின் வேர் ஆகியவற்றால் அமைத்துப் பூசை செய்யலாம். எருக்கில் வடிக்கும் விநாயகர் பூசை மகாசக்தி தரும் என்று சாஸ்திரம் சொல்லுகிறது.

இவருக்க விருப்பமானது அறுகம்புல் எருக்கு வன்னி இலை கொன்றை மோதகம் அப்பம் கொழுக்கட்டை தேங்காய் கரும்பு வெல்லம், பால் தேன் இளநீர் எள உருண்டை பயறு, முக்கனி ஆகும்.

ஓம் வக்ரதுண்டாயஹும் என்பது விநாயகருக்குரிய சடாட்சர மந்திரமாகும். முருகப்பெருமான் இதனை உச்சரித்து தாரகாசுரனைக் கொன்றார். வாமன அவதாரத்திருமால் தம் தந்தை காசிபரிடம் இம்மந்திர உபதேசம் பெற்று உச்சரித்து மாவலியின் மமதையை அடக்கினார் பரசுராமர் இம்மந்திர மகிமையினாலே 21 தலைமுறை அரசரை அழித்தார் மகாராஷ்டிரத்தில் பூனாவிற்கு 50 கி.மீ. தூரத்திலுள்ள மயூரேசம் முக்கியத்தலம்.

தமிழ் நாட்டிற் செங்காட்டிங்குடியிற் பல்வத் தளபதி பரஞ்சோதி கொண்டு வந்த விநாயகர் உள்ளார். இவரும் திருச்சி உச்சிப்பிள்ளையாரும் சிறப்புடையவர். சுவாமி மலைக்கு அருகிலுள்ள திருவலஞ்சுழியிலுள்ள வெள்ளை (ஸ்வேத) விநாயகர் இந்திரனால் நிறுவப்பட்டவர். பரஞ்சோதியாற் காரைக்குடியை அடுத்த ஈக்காட்டூரில் (பிள்ளையார்பட்டி) அமைக்கப்பட்ட குடவரைக் கோவில் உள்ள கற்பக விநாயகர் ஆலயம் சிறப்புடையது. இவர் தேசிக விநாகயப் பிள்ளையார் என்றும் கற்பக விநாயகர் என்றும் பெயர் பெற்றார்.

## 23 ஆவணி ஞாயிறு

ஆவணி மாதம் சோதிட சாத்திரப்படி சிங்கமாதம் என்று கூறப்படும் சூரியன் சிங்க ராசியிற் பிரவேசிப்பதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றது. இம்மாதங்களில் வரும் ஞாயிறன்று சூரியனுக்குப் பொங்கல் இட்டு வழிபாடு செய்வது வழக்கம்.

இத்திங்களில் வரும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் விரதமிருந்து சூரியனுக்குப் பொங்கலிடுகின்றனர். அது முடியாதவர்கள் முதல் ஞாயிறன்றும் கடைசி ஞாயிறன்றும் பொங்கிலிடுவது உண்டு.

## 24 திரு ஓணம் சிரவண துவாதசி

ஆவணி மாதம் துவாதசியை விஷ்ணு திதி என்பர். 27 நட்சத்திரங்களில் சிரவணம் என்னும் திருவோணமும் ஆருத்ரா என்னும் திருவாதிரை மட்டுமே திரு (ஸ்ரீ) என்னும் சிறப்புடன் அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு தேவதையாகும். திருவோணம் - விஷ்ணு ஆகும். திருஓணம் துவாதசியில் வந்தால் அது பல ஏகாதசிகளை விடச் சிறந்த புண்ணி யகாலமாகும். கேரளாவில் திருவோணம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்

மகாபலி ஆவணி மாத சிரவண துவாதசி அன்று தான் ஆண்ட நாட்டை விஷ்ணுவிடம் தாரை வார்த்துக் கொடுத்து வரம் பெற்றதாக வரலாறு! அன்று கேரளத்தவர் புத்தாடை பூண்டு திருஓணம் பண்டிகை என்று கொண்டாடுவர்.

## 25 நாக சதுர்த்தி

இவ்விரதம் ஜாதகத்தில் நாகதோஷம் இருப்பவர்கள் அதற்குப் பரிகாரமாக இருக்கவேண்டிய விரதம் ஆகும். ஆடிமாதம் திருதியைத் திதியில் வரும் நாகசதுர்த்தியில் விரதம் இருந்தால் நாகதோஷம் விலகும். இவ்விரதத்தினைக் குடும்பத்தினர் அனைவரும் கலந்து கடைப்பிடிக்க வேண்டும்.

அதிகாலையில் எழுந்து குளித்து அருகிலுள்ள மாரியம்மன் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்ய வேண்டும். பாம்புப் புற்றுக்குப் பால்வார்த்து கற்பூர ஆராதனை செய்தல் வேண்டும்.

## 26 கோகுலாஷ்டமி



ஆவணி மாதம் அவிட்ட நட்சத்திரத்திற்கு எட்டாம் நாள் ரோகிண நட்சத்திரத்தன்று கொண்டாடப்படும் அன்றுதான் அஷ்டமி திதியிற் கண்ணன் பிறந்தான்.

இதனைக் கிரஷ்ண ஜெயந்தியாகக் கொண டாடுவர். வீதியெங்கும் பஜனைப் பாடல்களும் இடம் பெறும்

பிருந்தாவனம் துவாரகை பண்டரிபுரம் முதலிய இடங்களில் மிகப் பெரிய அளவில் விழாக்களாகக் கொண்டாடப்படும். அன்று வீட்டின் வாயிலிருந்து பூஜை அறைவரை சிறு குழந்தை நடந்துவந்த பாதச்சுவட்டினைப் பதியச் செய்வர் கிருஷ்ணர் தம் வீட்டிற்கு வந்தைப் போன்ற ஒர் இனிய உணர்வு இதனால் ஏற்படுகின்றது.

இவ்விரதம் தம்பதியராகவே செய்தல் வேண்டும் பகலில் உபவாசமிருந்து வசுதேவ தேவகியுடன் கூட ஸ்ரீ கிருஷ்ணனைப் பூஜித்து, கண்விழித்திருந்து அவரது சரிதத்தைக் கேட்கவேண்டும்.

மறுநாள் பூஜை செய்து பாரணை செய்ய வேண்டும் பாகவதத்தில் அவதார கட்டத்தைப் பாராயணம் செய்வதும் பாகவதம் கேட்பதும் புண்ணியம் தரும்.

## 27 ஆவணி அவிட்டம்

வைதீக முறையிற் பூணூல் தரிப்பவர்கட்காக நடத்தப்பெறும் பண்டிகை ஆகும் ஆவணி மாதம் பௌர்ணமியன்று அவிட்ட நட்சத்திரத்திற் கொண்டாடப்பெறம் இந்நாளிற் புதிய பூணூலை மாற்றிக் கொள்வர். சூரியனுக்குரிய சிம்மராசியில் சூரியன் ஆவணி மாதத்தில் ஆட்சி பெறுகிறார். பௌர்ணமி தினத்தன்று அவிட்ட நட்சத்திரம் அமையும் நாளில் சந்திரன் கும்பராசியில் பூரணமாகப் பிரகாசிப்பார் எனவே அன்று சூரியனும் சந்திரனும் மிகுந்த சக்தி பெற்றவர்களாய் இருப்பர் அதனாற்றான் அந்நாளிற் பூணூல் தரிக்கின்றனர்.

எம்பெருமானின் வாமன அவதாரத்தில் வாமனனுக்கு அகில லோகங்களும் கண்டு களிக்கும் வண்ணம் உபநயனம் என்னும் பூணூல் வைபவம் மிகவும் மங்கலகரமாகக் கொண்டாடப்பட்டது.

ஆவணி அவிட்டத்திற்கு அடுத்தநாள் காயத்ரி மந்திரம் ஓத ஒதுக்குகின்றனர். சூரிய பகவானை நோக்கி இதனைப் பொருள் உணர்ந்து 10, 108, 1008 முறை அவரவர்களின் வசதிற்கேற்ப ஓதுதல் வேண்டும்.

காயத்ரீஜெபம் பொருள் புரிந்து ஜபிக்க வேண்டும் காயத்ரீ என்றால் எவர்கள் தன்னை கனம் பண்ணுகிறார்களோ அவர்களை ரஷிப்பது என்று பொருள்.

சாஸ்திரப் பிரகாரம் செய்ய வேண்டிய காரியங்களிலெல்லாம் மிக முக்கியமான காரியம் காயத்ரீ ஜபமாகும்.

## 28 காயத்திரி ஜெபம்

வேத மந்திரங்களில் மிக முக்கியமானதும் மகாமந்திரம் என்று அழைக்கப் பெறுவதும் காயத்ரி ஜெபம் ஆகும். இதனை ஒவ்வொரு நாளும் ஓதினால் அகக்கண் திறந்து ஞானம் பிறக்கும் .சூரிய சந்திர கிரகண வேளைகளில் இதனை ஓதினாலும் விசேஷ பலன்கள் கிட்டும். ஆவணி மாதம் தேய்பிறையில் முதல் நாள் காயத்திரி ஜெபம் செய்பவர்கட்கு சொற்ப முயற்சிக்கும் பூரண பலன் உண்டு. எனவே இந்நாள் காயத்திரி ஜெபநாள் என்று கூறுவர்.

இச்ஜெபம் சூரிய பகவானின் அருள் வேண்டி ஓதுவதாகும். இம்மந்திரத்தனைப் பொருள் உணர்ந்து ஜெபித்தால் நல்ல பலன்கள் கிட்டும் . இதனை 108 தடவையோ அல்லது 1008 தடவையோ செய்யலாம். ஜெபமாலை உத்திராட்சம் வைத்தும் ஓதலாம். இயலாதவர்க்ள 10 முறை ஜெபிக்கலாம்.

## காயத்திரி மந்திரம்

காலை மாலைகளில் சந்தியா வந்தனம் செய்து முடித்ததும் காயத்திரி மந்திரம் ஜெபிக்க வேண்டும் காலையில் சூரிய உதயத்திற்கு முன்பும் மாலை சூரிய அஸ்தமன வேளையும் பிராணாயாம நியமத்தோடு காயத்திரியை ஜெபிக்க வேண்டும் இதனால் பாவம் அழியும் சஞ்சிதம் பிராப்தம் ஆகாமியம் என்னும் வினைகள் ஒழியும் பிறப்பு நீங்கும் விதேக கைவல்ய பதவி கிட்டும்.

இம்மந்திரத்திலுள்ள இருபத்தி நான்கு எழுத்துக்கள் எல்லாத் தேவர்களையம் சுட்டுகின்றது. இம்மந்திர ஜெபம் எல்லாத் தேவர்களுடைய அருளையும் பெறுவதற்குரியதாகும். ஓம்பூர் புவஸ்ஸுவ: தத்ஸவிதுர் வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமாஹி தீயோயோந "பிரசோதயாத்"

## 29 சுவர்ண கௌரி விரதம்



விநாயகர் சதுர்த்திக்கு முன்தினம் அதாவது ஆவணிமாத் வளர்பிறை சதுர்த்திக்கு முன்தினம் இருக்கவேண்டும். இவ்விரதம் 16 ஆண்டுகள் தொடர்ந்து இருந்தால் மிகுந்த நற்பலகள் கிட்டு இவ்விரதத்தைத் தனியாகவோ அல்லது பல பெண்கள் சேர்ந்து கூட்டாகவோ செய்யலாம்.

சூரிய உதயத்திற்கு முன் எழுந்து காலைக்கடன்களை முடித்து நீராடி, வழிபாட்டறையில் நெய்விளக்கு ஏற்றி விரதத்தைத் தொடங்க வேண்டும் பூஜைச் சாமான்களுடன் மஞ்சல் கயிற்றிற் பதினாறு முடிச்சுக்கள் போட்ட கயிற்றையும் அவல் கடலை பொரி பழம் தேங்காய் கல்கண்டும் தட்டில் வைக்கவேண்டும்.

அம்பிகையைத் தோத்திரங்கனைக் கூறி வழிபட்டு கற்பூரம் சாம்பிராணி தூபம் காட்டி வணங்க வேண்டும்.

பூஜை முடிந்தததும் கணவன் அல்லது சுமங்கலிப் பெண்களைக் கொண்டு மஞ்சட் கயிற்றைக் கட்ட வேண்டும் வந்திருப்பவர்கட்கும் மஞ்சட் கயிறும் கொடுக்கவேண்டும். பூஜைக்கு வந்தவர்கட்கு உணவு படைத்து தாம்பூலம் கொடுத்து ஆசிபெற்ற பின்னரே விரதமிருப்போர் உணவு உண்ணவேண்டும்.

# 30 நவராத்திரி



உலக மாதாவாகிய உமாதேவியை வழிபாடு செய்யும் பண்டிகை நவராத்திரியாகும்.

புரட்டாதி மாதம் பூர்வபக்க பிரதமைத் திதி (சுக்கில பட்சம் முதல் நாள்) முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப்படும்

பத்தாம் நாள் விஜயதசமி கலைமகள் விழா எனப்படும்.

இந்த ஒன்பது நாட்களிலும் முப்பெரும் பெண் தெய்வங்களான துர்க்கை லட்சுமி சரஸ்வதி ஆகிய மூவரையும் வழிபடுகிறார்கள். துர்க்கை வீரத்திற்கும் லட்சுமி செல்வத்திற்கும் சரஸ்வதி கல்விக்கம் உரிய தெய்வங்களாதலால் இவர்களை வழிபட இந்நவராத்தரி எற்பட்டது.

எருமை வடிவம் கொண்ட மகிஷாசுரனை வதங் செய்வதற்கு அறிகுறியாகக் கொண்டாடப்பெறுவதே நவராத்திரி என்று தேவி புராணம் கூறுகிறது.

முதல் மூன்று தினங்கள் வெற்றியைத் தர வேண்டி துர்க்காதேவியையும், அடுத்த மூன்று தினங்கள் செல்வம் வேண்டி லட்சுமியையும் இறுதி மூன்று தினங்கள் கல்வியை வேண்டி சரஸ்வதியையும் வழிட வேண்டும்.

பத்தாம் நாள் விஜயதசமி அன்று கல்வி கற்க ஆரம்பிக்கலாம். பழைய காலத்தில் ஏட்டுச்சுவடிகளை அடுக்கி வைத்து வழிபாடு செய்தனர். இப்போது அச்சிட்ட புத்தகங்களை அடுக்கி வழிபாடு செய்கின்றனர் மறுநாள் விஜயதசமி அன்று படிக்கவும் அரசர்கள் ஆயுதங்களைப் பயன்படுத்தவும் செய்வர். இந்நாளிலேதான் குழந்தைகட்க முதன்முதலாக எழுத்தறிவிக்கவும் தொடங்குவர்.

இந்த ஒன்பது நாட்களிலும் அழகான பொம்மைகளைக் கொலு வைத்து மிகச்சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். கன்னிப்பெண்களை இந்த நவராத்திரி நாளில் தேவியின் ஒன்பது அம்சமாகப் பாவித்து ஆராதிப்பது சிறப்பாகும்.

இக்கொலுவினைப் பார்க்க மற்றவர்களை அழைத்து அவர்கட்குக் குங்குமம், சிற்றுண்டி கொடுப்பர். இரண்டு முதல் பத்து வயதுள்ள கன்னிப்பெண்களுக்கு மஞ்சள் குங்குமம் போன்ற மங்கலப் பொருட்களை கௌரி பூசை செய்து கொடுப்பது சிறப்பு. குழந்தைகட்கு இவ்விழாவிற் சிறப்பான இடம் உண்டு

ஸ்ரீராமர் இராவணனை வெற்றி கொண்ட நாள் விஜயதசமி நாளாகும். ஸ்ரீராமபிரானின் மூதாதையர்கள் நவரர்திரி விழாவை ஆரம்பித்து வைத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

விஜயதசமி நன்னாள் வெற்றி வீரம் கல்வி அனைத்தையும் தரும் சுபநாள்.

அந்நாளில் வன்னி மரத்தைப் பூசித்து வழிபட்டால் பாவ நிவர்த்தி சத்ரு நாசம் ஏற்படும்.

## 31 மாளய பக்ஷம்

இறந்தவர்களுக்காகச் செய்யப்படும் பொது அமாவாசை சிரார்த்தமாகும் புரட்டாசி மாதம் அபர பக்ஷபிரதமை முதலாக பூர்வபக்ஷச் சதுர்த்தி வரையான காலம் மாளய பக்ஷமெனப்படும்.

புரட்டாதி மாதத்தில் சூரியனின் தென்பாகம் நடுப்பகம் பூமிக்கு நேராக நிற்கின்றது. அப்போது சந்திரனின் தென்பாகமும் நேராக நிற்கின்றது. அத்தருணம் பிதிர் கருமங்களக்கு விசேடமான காலமாகும். சிரார்த்த கருமங்கள் செய்ய காசி கயை, பிரயாகை, குருக்ஷேத்திரம் கோசர்களம் குருநாங்கலம் புட்கலக்ஷேத்திரம் சிறந்த இடமாகும்.

இறந்தவர்கள் எந்த மாதம் எந்தத்திதியில் இறக்கின்றனரோ அந்த மாதம் அந்தத் திதியிற் சிரார்த்தம் செய்யவேண்டும். அதனை மாசியம் என்று கூறுவர். திதி தெரியாதவர்கள் அம்மாத அமாவாசையிற் செய்யவேண்டும் மாதம் தெரியாதவர்கள் ஆடி புரட்டாதி மார்கழி, மாசி மாத அபரபக்ஷ்ச அஷ்டமி அல்லது அமாவாசையிற் செய்ய வேண்ம் மாதந்தோறும் இறந்த திதியிற் செய்வது மிகவும் சிரேஷ்டமாகும்.

சூரியன்கயாராசியிற் புகும் ஆஷாடம் முதல் ஐந்தாவது அபரபக்ஷம் வரையான காலத்தில் யமதர்மராஜன் தம்மிடமிருந்க்கும் பித்ருக்களைப் பூமிக்குச் செல்லம் படி அனுப்புகிறார். பித்ருக்கள் வந்த அந்த 16 நாட்களும் மகாளய விதிப்படி அன்ன சிரார்த்தம் அல்லது ஒரு நாள் மாத்திரம் மகாளயம் செய்து மற்ற நாட்களில் தர்ப்பணம் செய்யவேண்டும்.

## 32 புரட்டாதி சனிக்கிழமை

ஸ்ரீமத் நாராயணனுக்கு புரட்டாதி மாதம் வரும் சனிக்கிழமை மிக்க உகந்த நாளாகும். புரட்டாதி மாம் வரும் எல்லா சனிக்கிழமைகளும் ஸ்ரீ வெங் டேசப்ரெுமானுக்கு மாவிளக்கு ஏற்றி வழிபாடு செய்வர்.



திருப்பதியில் அன்று பெருமாளை வழிபாடு செய்வது மிகவும் சிறப்பாகும். இந்நாளில் விரதம் இருப்பின் வெங்கடேசப் பெருமானின் அருள் கிட்டும் புரட்டாதியில் கொண்டாடப்படும் திருப்பதி பிரம்மோற்சவம் மிகவம் சிறப்பாகும்.

# 33 தீபாவளி

தீபாவளியை நரக சதுர்த்தி என்றழைப்பர். ஐப்பறி மாதத்திற் சூரிய துலாராசியில் இருப்பார் அப்போது தேய்பிறையின் (கிருஷ்ண பக்ஷம்) பதினான்காம் நாளில் திபாவளி கொண்டாடப்பெறும் திரயோதசி இரவ சதுர்த்தசி காலை கொண்டாடப்பெறுவதினால் இது நரகசதுர்த்தசி என வழங்கப்படுகிறது.

முன்காலத்தில் நரகாசுரன் என்பவன் அருந்தவத்தால் பிரம்மனை வழிபட்டுப் பெரும் வரங்களைப் பெற்று அவ்வரங்களின் மகிமையினால் எல்லோருக்கும் துன்பம் விளைவித்து வந்தான். இந்திரனுடனும் போர் புரிந்தான்.

எனவே இந்திரனும் இதர முனிவர்களும் கிருஷ்ண பகவானிடம் முறையிட்டனர்.

கிருஷ்ணபகவான் நரகாசுரனைத் தம் சக்கராயுதத்தால் அவன் உடலைப்பிளந்தார். அப்போதுநரகாசுரன் கிருஷ்ண பகவானை வணங்கி நான் செய்த பாவங்களைப் பொறுத்துக் கொள்வதுடன் கொடியவனாகி நான் இறக்கும் இந்நாளை மக்கள் அனைவரும் தொல்லை நீங்கிய மங்களகரமான நாளாகக் கொண்டாடவும் இன்புறவும் வேண்டும். இந்நாளில் என்னை நினைத்து நீராடி புதிய துணிகள் அணிந்து ஆலய வழிபாடு செய்பவர்கடகு அசுவமேதயாகம் செய்த பலன்கிட்ட வேண்டும். என்றும் வேண்டினான்.

பகவானும் அவ்வாறே அருளினார். அத்தினமே தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது. நரகாசுரனுக்கு மோக்ஷம் கொடுத்த காரணத்தால் தீபாவளி பண்டிகையை நரகசதுர்த்தி என்று கூறுவர். இந்நாளில் அனைவரும் எண்ணெய் தேய்த்துக் குளித்து, புதிய துணிகளைப் பூண்டு பல்வகைப்பலகாரங்களையும் செய்து கொண்டாடுகின்றனர். இந்நாளிற்

பட்டாசுகள் வெடிப்பது மிகவும் முக்கியமானதாகும் தீபாவளி என்றால் தீபவரிசை என்றும் கூறுவர். இந்நாளில் தீபங்களை வரிசையாக வைத்துக் கொண்டாடுவர். இந்நாளில் இருந்தே புதக்கணக்குத் தொடங்குவர். இந்நாளில் தொடங்கும் வணிகம் இலாபகரமாக இருக்கும் வெற்றி தரும் என்பது நம்பிக்கை. மகாபலி முடிசூட்டிக் கொண்டது இந்தத் தீபாவளித்திருநாளிலே ஆகும். பண்டைய காலத்து மன்னர்கள் இக்காரணம் பற்றியே தீபாவளி நாளில் மகாபலியை வணங்கி வந்தனர்.ராமபிரான் வனவாசத்தை முடித்து ஸ்ரீ அயோத்தியாதிரும்பியது இத்தீபாவளித்திருநாளில். அன்ற அயோத்தி எங்கும் விளக்கேற்றி வழிபட்டனர். அதனால் தீபாவளி அன்று திருவிளக்குகளை வரிசையாக ஏற்றி வைக்கும் பழக்கம் ஏற்பட்டது. தீபாவளித் தினத்தன்று வரும் அமாவாசை அன்று பித்ருகளுக்குத் தர்ப்பணம் செய்வது விசேஷம்.

## 34 கந்தர் சஷ்டி விரதம்



இந்துக்கள் முக்கியம்ாக முருக பக்தர்கள் கட்டாயம் கடைப்பிடிக்கும் விரதங்களில் சஷ்டி விரதமும் ஒன்றாகும். சுக்ல பக்ஷம் பிரதமை முதல் பூஜிப்பர். விநாயகர் சதுர்த்தி போல் முருகருக்கு கந்தர்சஷ்டி குறிப்பிடத்தக்கது. முருகப் பெருமான் சூரபத்மனை அழித்து உலகுக்கு அருள்புரிந்த நன்னாள் கந்தர் சஷ்டி நாளாகும்.

கந்தனுக்குரிய விரதங்கள் மூன்று வகையாகும் வாரவிரதம் நட்சத்திர விரதம் திதிவிரதம் ஆகும். வார விரதம் என்பது ஒவ்வொரு வாரத்திலும் சுக்கிரவாரம் என்று சொல்லப்படும் வெள்ளிக்கிழமையன்று விரதமிருந்து முருகனை வழிபடுவது.

நட்சத்திர விரதம் என்பது ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நட்சத்திரத்தன்று விரதமிருந்து முருகனை வழிபடுவது. திதிவிரதம் என்பது ஐப்பசி மாதம் வளர்பிறையில் சஷ்டியன்று விரதமிருந்து முருகனை வழிபடுவது. ஒவ்வொரு மாதமும் வரும் சஷ்டியன்று விரதம் இருப்பவர்களும் உண்டு அன்று உண்ணாநோன்பு இருப்பது சிறப்பாகும். அமாவாசைக்கு அடுத்த ஆறு நாட்களிலும் காலையில்நீராடி தோய்த் துலர்ந்த ஆடை அணிந்து இரவினில் தம்பம், விம்பம் கும்பங்களில் முருகனைப் பூஜித்து வெல்லம் சேர்த்து நெய்யில் அமைத்த மோதககத்தை நிவேதித்தல் வேண்டும்.

அந்நாளில் திருமுருகாற்றுப்படை, கந்தர்சட்டி கவசம், கந்தர் அலங்காரம், கந்தரந்தாதி, கந்தர் கலிவெண்பா ஆகியவற்றை ஆசாரத்துடன் ஓதி, கந்தபுராணம் படித்து வருவர்.

எழாம் நாள் அடியார்களுக்கு அன்னம் அளித்து பாரணம் செய்தல் வேண்டும் முருகன் கோவில்களில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பெறும்

சஷ்டியில் விரதம் இருந்தால்அகப்பை எனும் கருப்பையில் குழந்தை பிறக்கும் என்பது உண்மை. இந்தப் பழமொழி தான் மருவி சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும் என்றானது.குழந்தை இல்லாத தம்பதியர் சஷ்டி விரதம் இருப்பது பயன் தருவதாகும். முருகனை வார விரதமாகச் செவ்வாய்க்கிழமையும் திதிவிரதமாக சஷ்டியன்று நட்சத்திர விரதமாக கிருத்திகை அன்றும் வழிபடுவர்.

## 35. கேதாரீஸ்வரர் விரதம்



ஐப்பசி மாதம் கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தித் திதியில் அனுஷ்டிக்கப்படும் விரதம் இது. பரம சிவனுக்குக் கேதாரீஸ்வரர் என்று ஒரு திருநாமம் உண்டு. கேதாரீஸ்வரரை நோக்கி கௌரி செய்த விரதம் ஆதலால் இப்பெயர் பெற்றது.

பிருங்கி முனிவர் சக்தியை விலக்கி சிவனை மட்டும் வலம் வந்ததைக் கண்டு சக்தி சினந்து சிவபிரானில் இடப்பாகம் பெற வேண்டி கௌதம முனிவர் வனத்தில் தவம் இருந்தார் கௌதமர் தேவியை வணங்கி விரதத்தின் மகிமையைக் கூறினார்.

விதிப்படி ஸ்ரீ பார்வதிதேவி ஈசுவரனை நோக்கி விரதமிருந்து பாதி உடம்மைப் (இடப்பக்கம்) பெற்றதாள் இது. ஈஸ்வரன் அர்த்தநாரீஸ்வரர் ஆன புண்ணிய நாள் 21 இழையினாலான காப்பை ஆண்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் கட்டிக் கொள்ளவேண்டும்.

பாத்ரபத சுக்லஅஷ்டமி முதல் அமாவாசை வரை 20 நாட்களும் சூரியன் மறைந்த பின் ஒரு பொழுது மட்டும் உணவு அருந்தி இரவு தருப்பையில் உறங்கவேண்டும். இறுதி நாளான சதுர்த்தியன்று கலசம் வைத்துப் பூஜை செய்து கேதாரநாதரை வணங்கி உபவாசம் இருக்க வேண்டும். இவ்விரதத்தின் மகிமையை அளவிட்டுக் கூற முடியாது. இவ்விரதம் இருப்பவர்களின் வறுமைகள் ஒழிந்து செல்வம் பெருகும் நினைத்தது எல்லாம் ஈடேறும்.

# 36 திருக்கார்த்திகைத் தீபம்

கார்த்திகை மாதம் பௌர்ணமி அன்று கிருத்திகை நட்சத்திரம் வருவதனால் இம்மாதம் கார்த்திகை மாதம் என அழைக்கப்படுகிறது.

திருமாலுக்கும் பிரமனக்கும் யார் பெயரிவர் என்ற விவாதம் ஏற்பட அதனை முடிவுக்குக் கொண்டுவர சிவபிரானை வேண்டினர் சிவன் ஜோதியாய் ரூபம் கொண்டு இதன் அடியையோ முடியையோ யார் முதலிற் காண்கின்றீர்களோ அவர்களேபெரியவர் என்றார்.

பிரமன் அன்னப் பக்ஷிவடிவம் கொண்டு முடியைத் தேடி உயரப் பறக்க திருமால் வராக வடிவம் கொண்டு அடியைக் காணக் கீழே சென்றார். அடியையும் முடியையும் காணமுடியவில்லை எனவே அணுக முடியாத ஜோதி மலையாகத் தோன்றிய சிவன் அண்ணாமலை என்றழைக்கப்பட்டார். பிரமனும் திருமாலும் அகந்தை அழிந்து அண்ணாமலையை வழிப்பட்டனர். இன்றும் திருவண்ணாமலையில் ஜோதி ரூபம் காணப்பெறுகின்றது. எல்லா ஆலயங்களிலும் அன்று ஜோதியை நினைவூட்டும் வகையிற் சொக்கர்பனை எரியூட்டப் பெறுகின்றது.

சொர்க்கர்பனை ஏகஜோதி மயமாய் ஒளி வடிவினனாகிய இறைவனை உணர்த்தும் கார்த்திகை விழா நமது ஆணவ இருளைப் போக்கி ஞான ஒளியைப் பெருக்குவதற்கு உகந்த விரமாகும்.

அன்று வீடுகளில் தீபங்களை ஏற்றி வழிபாடு செய்வர். பொதுவாகத் தமிழ்நாட்டில் கார்த்திகை மாதம் முழுவதும் வீட்டின் வாசலில் தீபம் ஏற்றுவர். திருக்கார்த்திகைத் தீபமன்று அலங்கார விளக்குகளை ஏற்றுவதுடன் வீடு முழுவதும் சிறுசிறு அகல்விளக்குகளை ஏற்றுவது வழக்கம்.

கார்த்திகைத் திங்களில் சோமவார விரதம் அனுஷ்டிப்போர் சகல மேன்மைகளையம் அடைவர் இந்த விரதத்தை முறையோடு பன்னிரண்டு ஆண்டுகாலம் தவறாமல் அனுஷ்டித்து வந்த நாரத முனிவர் சகல மேன்மைகளையும் பெற்றார். திரிசங்கு மன்னன் இவ்விரத மகிமையால் அரசு கட்டிலில் அமர்ந்தான் பகீரதன் இந்த விரத மகிமையால் தான் இழந்த நாட்டைத் திரும்பப் பெற்றான்.

கார்த்திகை மாதம் ஐயப்ப பக்தர்கள் மாலை அணியும் நாளாக கொண்டாடுகிறார்கள்.

## 37 உமாமகேஸ்வர விரதம்

கார்த்திகை மாதம் பௌர்ணமி அன்று இவ்விரதம் இருக்கவேண்டும். சிவ விஷ்ணு தேவி பூஜைக்கு மிகச் சிறந்த காலம் ஆகும்.

உமாமகேஸ்வர மூர்த்தம் மிகவும் சக்தி வாய்ந்ததாகும் எல்லா விரதங்களையும் போல் வீட்டினைச் சுத்தம் செய்து மெழுகி கோலமிட்டு ஒரு குறிப்பிட்ட இடத்திற்பொன் அல்லது வெள்ளியால் செய்த உமை, சிவன் திருவுருவங்களைப்பஞ்ச கவ்வியத்தினால் அபிஷேகம் செய்து புதிய துணி அணிவித்து திரு அமுதுபடைக்க வேண்டும். தீபதூபங்கள் காட்டி மனமுருக வணங்குதல் வேண்டும். அன்று ஒரு பொழுது மட்டுமே உண்ணவேண்டும்.

சிவ ஆலயஞ் செய்று தம் மனதிற் கருதிய பொருளை விரும்பி இறைவனைத் தோத்திரம்செய்ய வேண்டும்.

மறுநாட் காலையிற் கும்பத்தையும் பிம்பத்தையும் முன்போல் வணங்கி அந்தணருக்கு அவற்றைத் தானமாகக் கொடுத்து அடியார்களுடன் திரு அமுது செய்ய வேண்டும். ஆண்டுதோறும் இந்நோன்பினைக் கடைப்பிடிப்பவர்கட்கு இம்மையிற் சகல செல்வங்களும் மறுமையில் முக்தியும் கிட்டும்.

15 கலசங்களில் 15 உமாமகேஸ்வரப் பிரதிமை வைத்து 15 வகைப்பண்டங்களைப் படைத்து 15 முடியுள்ள கயிறு தரிக்க வேண்டும் 15 ஆண்டுகள் இவ்விரதம் இருந்தாற் சகல போகங்களம் பெற்று முடிவில் மோட்சமும் பெறலாம்.

# 38 திருவாதிரைத் திருநாள்



மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரம் கூடிய பௌர்ணமி அன்று கொண்டாடப்பெறும் ஆடல் வல்லானாகிய நடராசப் பெருமானுக்கு உகந்த நாள்.

தில்லையில் நடராசப் பெருமானின் ஆனந்தத் திருநடனத்தை மக்கள் சிறப்பாகக் கண்டு மகிழ்வது வழக்கம். இதனை ஆதிரைத் திருநாள் எனவம், ஆருத்ரா தரிசனம் என்றும் கூறுவர்.

திருப்பெருந்துறையிலும் கோவைப் பேரூரிலும் மதுரையிலும் திருக்குற்றாலத்திலும் சிதம்பரத்திற்கு அடுத்த படியாக மிகவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

மாதங்களிற் சிறந்தது மார்கழி ஆகும். பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன். என்றார்

பாரத யுத்தம் நடந்தது மார்கழியிற்றான். தேவர்களுக்கு இராக்காலம் முடியும் காலம் (விடியற்காலை வேளை) இம்மார்கழித் திங்களேயாகும். இதகைத் தனுர் மாதம் என்றும் அழைப்பர்.

பெரியாழ்வாரின் திருமகளார் பூங்கோதையெனும் ஆண்டாள் திருமாலை மணக்க, மார்கழி மாதம் முழுவதும் நோன்பு இருந்து திருமாலை அடைந்தார் அதுபோல கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில் பாவை நோன்பு இருந்தால் நல்ல கணவர் கிடைப்பார் இத்திங்களில் வீடுகளின் வாசல்களைத் தூய்மை செய்து பெரிய பெரிய கோலங்களிட்டு அதிற் பசும் சாணி மொத்தையின் மேற் பரங்கிப் பூக்களை வைப்பது வழக்கம். திருவாதிரை சிவனுக்கும் திருவோணம் நாராயணனுக்கும் உகந்த நன்னாளாகும்.

ஸ்ரீ நடராஜருக்கு ஆகும் அபிஷேகங்கள் ஆறு அதாவது

| மாதம் | நக்ஷத்திரம் | க்ஷேத்ரம் | நேரம் |
|---|---|---|---|
| சித்திரை | திருவோணம் | கனகசபை | மாலை |
| ஆனி | உத்திரம் | ராஜசபை என்கிற ஆயிரங்கால் மண்டபம் | உதயத்திற்கு முன் 4 மணி |
| ஆவணி | பூர்வபக்ஷ சதுர்த்தசி | கனகசபை | மாலை |
| புரட்டாதி | பூர்வபக்ஷ சதுர்த்தசி | கனகசபை | மாலை |
| மார்கழி | திருவாதிரை | ராஜசபை என கிற ஆயிரங்கால் மண்டபம் | உதயத்திற்கு முன் 4 மணி |
| மாசி | பூர்வபக்ஷ சதுர்த்தசி | கனகசபை | மாலை |

## 39 வைகுண்ட ஏகாதசி



மார்கழி மாதம் சுக்கில பட்சத்தில் வரும் ஏகாதசி வைகுண்ட ஏகாதசியாகும். அன்று உண்ணா நோன்பு இருந்தால் திருமால் அருள் கிடைக்கும். வைக்குண்ட லோகத்தில் எழுந்தருளியிருக்கும் காட்சியை அளிப்பார். இந்நாளில் இரவும் பகலும் உண்ணாநோன்பு இருந்து கண்விழிப்பது வழக்கம்.

முராசுரன் என்னும் அரக்கன் தேவர்களைத் துன்புறுத்தவே அவர்கள் சிவபெருமானை வணங்கி வேண்டினர். சிவபெருமான் திருமாலிடம் போய் அடைக்கலம் புகுந்தால் நன்மை கிடைக்கும் என்று அருளினார் திருமால் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் போது முராசுரன் தொல்லை கொடுக்க வரவே திருமாலின் சக்தி, பெண் உருக்கொணடு வந்து முராசுரனை எரித்தது.

திருமால் அசுரனை எரித்த தேவிக்கு ஏகாதசி என்னும் பெயர் சூட்டி உன்னை வழிபடுபவர்கட்கு வைகுண்டம் அளிப்பேன் என வரம் தந்தார்.

ஏகாதசி தோன்றிய நாளிற்றான் வைகுண்ட ஏகாதசி கொண்டாடப்படுகின்றது. அன்று வைணவத் தலங்களில் சிறப்பு வழிபாடுக்ள நடைபெறும்.

ஸ்ரீ ரங்கத்திற் சொர்க்க வாயில் திருவிழா மிகச்சிறப்பாகும். மறுநாள் காலை துவாதசி, பாரணை என்னும் விரதம் முடித்து உணவு உண்பர். ஏகாதசி மரணமும் துவாதசி தகனமும் யோகிகளுக்குக் கூடக் கிடைக்கமாட்டா என்பர்.

ஒரு மாதத்திற்கு இரு ஏகாதசி சுக்ல பட்சத்தில் வரும் வைகுண்ட ஏகாதசியும் சேர்ந்து இருபத்து எட்டு ஏகாதசிகள்.

| | | |
|---|---|---|
| தை | பைலை | புத்ரா |
| மாசி | ஸட்திலா | ஜயா |
| பங்குனி | விமலா | ஆமலகா |
| சித்திரை | பாபமோஹினி | காமதா |
| வைகாசி | வருதினி | மோகினி |
| ஆனி | அபரா | நிர்சிலா |
| ஆடி | யோகினி | சயினி |
| ஆவணி | காமிகை | புத்திரதா |
| புரட்டாதி | அஜா | பத்மநாபா |
| ஐப்பசி | இந்திரா | பாபங்குசா |
| கார்த்திகை | ரமா | பிரமபோதினி |
| மார்கழி | மோக்ஷ | உத்பத்தி |

ஆனி மாதம் வரும் நிர்சிலா ஏகாதசி விரதம் ஒன்றை மட்டுமாவது அனுஷ்டிப்பது மற்ற ஏகாதசி அனுஷ்டித்த பலன் கிட்டும்.

# 40 மார்கழி மாத விரதம்

பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா மாதங்களுள் தனுர்மாதமாக இருக்கிறேன். என்று கூறுகிறார். மாதங்களிற் சிறந்தது மார்கழி எனப் பெரியோர் கூறுவர் இம்மாதம் சிறந்த புண்ணிய காலமாகும்.

அதிகாலை எழுந்து நீராடி ஆலயம் சென்று வழிபட வேண்டும. இப்படி அதிகாலை செய்யும் உஷகால ஒரு நாள் பூஜை ஒரு வருஷம் பூஜை செய்த பலன் கொடுக்கும் எனக் கூறுவர்.

30 நாட்களும் காத்யாயினி விரதம் இருந்து கோபிகைகள் கிருஷ்ணனைக் கணவராக அடைந்தனர். இச்செய்திகளையே ஆண்டாள் திருப்பாவையிலும் பாடினார்.

ஸ்ரீவைஷ்ணவ ஆலயங்களில் இரவுபத்து, பகல்பத்து என்னும் முறையில் நாலாயிர திவ்ய பிரபந்தம் பாடப்படும். சிவ ஆலயங்களில் திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சு பாடப் பெறும்

இம்மாதத்தில் இல்லங்களின் வாயில்களைத் தூய்மை செய்து அழகிய வண்ணக் கோலங்கள் ஈடுவர். அதில் பசுஞ் சாணத்தைப் பிடித்து அதிற் புஷ்பம் வைப்பர். பின் அதனை வரட்டி போல் தட்டிப் பொங்கலின் போது அதில் பொங்கல் வைத்து ஆற்றில் ஈடுவர்.

இம்மாதத்திற்றான் வைகுண்ட ஏகாதசியும், ஆருத்ராதரிசனமும் வரும் ஆருத்ரா தரிசனம் சிதம்பரத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும்

## 41 ஆஞ்சநேயர் ஜெயந்தி



ஆஞ்சநேயர் ஜெயந்தி மார்கழி மாதம் மூல நட்சத்திரம் அமாவாசைத் திதியில் வரும்.அன்று அதிகாலை எழுந்து காலைக்கடன்களை முடித்து நீராடி உணவருந்தாமல் ஆஞ்சநேயர் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்யவேண்டும்.

ஆஞ்சநேருக்குப் பிடித்தமான துளசியால் அர்ச்சனை செய்வது மிகவும் நன்று. காலையிற் பெரியும் பழமும் மட்டும் உண்ணவேண்டும். மதியம், இரவு, பால், பழம்,பொரி சாப்பிடுவது நல்லது.

அன்று முழுவதும் அஞ்சநேயர் புராணம், இராமாயணம் படித்தல் வேண்டும். மாலையில் அஞ்சநேயருக்கு வடைமாலை பொரி பழம் கற்கண்டு இளநீர் நிவேதனம் செய்த வணங்குதல் வேண்டும். இவ்விரதம் இருந்தால் பிரிந்தவர்க்ள சேர்வார்கள். பிணக்குகள் நீங்கும் ஆஞுசநேயர் அருள்கிட்டும்.

ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை சாத்துவது மிகவம் விசேஷம் அவருக்கு வாலில் இருந்து குங்குமப் பொட்டு வைத்து வழிபடுவதும் உண்டு

# மற்றும் சில விரதங்கள்

### சிவவிரதம்

சோமவார விரதம் திருவாதிரை விரதம் உமா மகேசுரர் விரதம், சிவராத்திரி விரதம் கேதார விரதம், கல்யாண சுந்தரர் விரதம், சூல விரதம். இடப விரதம் பிரதோஷ விரதம் எனச் சிவ விரதங்கள் ஒன்பது என்பர்.

### சோமவார விரதம்

சோமவார விரதம், கார்த்திகை மாத்தின் முதற் சோம வாரத்திலிருந்து இருத்தல் வேண்டம். சோம வாரத்தில் உண்ணா நோன்பு மேற்கொள்வது முறை. இவ்விரதம் வாழ்நாள் அளவு அல்லது12 ஆண்டுகள், 3 ஆண்டுகள் அல்லது ஓராண்டு இருக்கலாம்.

### கல்யாண சுந்தரர் விரதம்

இவ்விரதம் பங்குனி உத்திரத்தன்று மேற்கொள்ளப்படும். ஒரு பொழு மட்டும் உணவு கொள்ளலாம் இரவிற் பழம் அருந்தலாம்.

### சூல விரதம்

(சூலாயுதம் தரித்த சிவபெருமான்) இந்த விரதத்தை அமாவாசையன்று இருக்க வேண்டும். ஒரு பொழுது மட்டும் பகல் உணவு அருந்தலாம். இரவு உண்ணாநோன்பு இருக்க வேண்டும்.

### இடப வீரதம்

(இடபாரூடராகிய சிவபெருமான்) இவ்விரதம் வைகாசி சுக்கல பட்சம் அஷ்டமி அன்று மேற்கொள்ளப்படும். ஒரு பொழுது பகல் உணவு மட்டும் அருந்தலாம்.

## இரண்டு தேவி விரதம்

(உத்தர விரதம்) சுக்கிர வாரம், நவராத்திரி ஆகிய தினங்களில் மேற்கொள்ள வேண்டும்

## சுக்கிர வார விரதம்

இவ்விரதம் சித்திரை மாதம் சுக்கல பட்சத்து முதற் சுக்கிர வாரம் முதல் ஒவ்வொரு வாரமும் இருக்க வேண்டும். விரதத்தின் போது ஒரு பொழுது பகல் உணவு மட்டும் உட் கொள்ளலாம்.

## ஐப்பசி உத்திர விரதம்.

இவ்விரதம் ஐப்பசி மாதம் உததிர நட்சத்திரத்தன்று மேற்கொள்ளவேண்டும். ஒரு பொழுது பகல் உணவு மட்டும் அருந்தலாம்.

## விநாாயகர் சஷ்டி விரதம்:

இவ்விரதம் கார்த்திகை கிருஷ்ணபட்சத்துப் பிரதமை முதல் சுக்கில பட்சத்து சஷ்டி வரை 21 நாட்கள் அனுஷ்டிக்கப்படும் 21 இமைகளால் ஆன காப்பை ஆண்கள் வலது கரத்திலும், பெண்கள் இடது கரத்திலும் தரித்தல் வேண்டும். ஒரு பொழுது உணவு உட் கொள்ளல் வேண்டும். சஷ்டியன்று உண்ணா நோன்பு இருத்தல் மிகவும் சிறப்பாகும்.

## சுப்பிரமணியர் விரதம்

சுக்கிர வார விரதம், கார்த்திகை விரதம், ஸ்கந்தர் சஷ்டி விரதம்

## சக்கிர வார விரதம்

இவ்விரதம் ஐப்பசி முதற் சுக்கிர வாரம் முதல் இருந்தல் வேண்டும். முழு உண்ணாநோன்பு சிறப்புடையது. இயலாதோர் ஒரு பொழுது உணவு உட்கொள்ளலாம்.

இவ்விரதம் வாரம் தோறும் மூன்று ஆண்டுகள் இருத்தல் முறை

## வைரவ விரதம்

மங்கல வார விரதம், சித்திரைப் பரணி விரதம், ஐப்பசி பரணி விரதம்

## மங்கல வார விரதம்

(வைரவர்) இவ்விரதம் தைமாதம் முதற் செவ்வாய் தொடங்கிச் செவ்வாய் தோறும் இருத்தல் வேண்டும். பகல் ஒரு பொழுது பழம், பலகாரம் அல்லது அன்னம் உட்கொள்ளலாம்.

## சித்திரைப் பரணி விரதம்

ஐப்பசி மாதம் பரணி நட்சத்திரத்தன்று மேற்கொள்ளப்படும். பகலில் ஒரு பொழுது பழம், பலகாரம் (அல்லது) அன்னம் அருந்தலாம்.

## ஐப்பசி பரணி விரதம்

இந்த விரதம் சித்திரை மாதம் பரணி நட்சத்திரத்தில் அனுஷ்டிக்கப்படும். பகல் ஒரு பொழுது பழம், பலகாரம் (அல்லது) அன்னம் அருந்தலாம்.

## பௌர்ணமி விரதம்

பௌர்ணமி அன்று சத்யநாராயணன் அருள்வேண்டி பகல் முழுவதும் விரதம் இருந்து (உணவு உண்ணாமல்) மாலையில் துளசி, பால் பாயாசம், கல்கண்டு வைத்து வணங்கி வரவேண்டும். இதனால் துன்பம் நீங்கும் குடும்பத்திற் சுபீட்சமும் செல்வமும் சேரும்.

சித்திரை மாதம் வரும் பௌர்ணமி மிகவும் சிறப்பாகும். இதனைச் சித்திரா பௌர்ணமி என்பர்.

# பிதோஷ விரதம்



ஒவ்வொரு மாதமும் பிரதோஷத்தன்று சிவபிரானின் அருள் வேண்டி இருக்கும் விரதமாகும். காலையில் எழுந்து குளித்து காலை உணவு அருந்தாமற் சிவதோத்திரங்களைக் கூறி வழிபாடு செய்ய வேண்டும். ஓம் நமசிவாய" என்னும் மந்திரம் ஓத வேண்டும். பகலிற் சிவனடியாருக்கு உணவு படைத்தபின் பகல் உணவு கொள்ள வேண்டும். மாலையில் சிவன் கோவில் சென்று வில்வ இலை, செம்பருத்திப்பூ, தும்பைப்பூ இவைகளில் ஏதாவதொன்றினால் அர்ச்சனை செய்து இடமிருந்து வலமாகத் திருக்கோவிலை வலம் வந்து வணங்கினாற் பிரதோஷங்கள் நீங்கி நல்வாழ்வு கிட்டும். பிரதோஷம் என்றால் இரவின் தொடக்கம், சிறந்த நேரம் எனப் பொருள் தரும். கடுமையான தோஷம் உள்ள நேரம் என்றும் கூறுவர். தீய சக்திகள் தொலைய இந்நேரத்தில் சிவனை வணங்க வேண்டும். நித்திய பிரதோஷம், பிரளயப் பிரதோஷம் என ஐவகைப்படும்.

நாள்தோறும் சூரியன் மறைவதற்கு 3 நாழிகைக்கு முன் நட்சத்திரங்கள் தெரியும் வகார நித்யப் பிரதோஷம். சுக்லபட்ச சதுர்ததி மாலை பட்சப் பிரதோஷம். அதுவே சனிக்கிழமை அமைந்தால் மகாப் பிரதோஷம். பிரளயக் காலத்தில் எல்லாம் சிவனிடம் ஒருங்கும் சமயம் பிரளயப் பிரதோஷம். பிரதோஷத் தன்று மாலையில் மூலலிங்க மூர்த்திக்கும் நந்திக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடத்தி, பிரதோஷ நாயகரை இடப வாகனத்தில் ஏற்றி, கோவில் பிரகாரத்தில் எழுந்தருளச் செய்வர்.

## வளம் தரும்
## வார விரதங்கள்

### திங்கட்கிழமை விரதம்

இது பற்றி சோமவார விரதத்திற் கூறப்பட்டுள்ளது. ஜாதகத்திற் சந்திரதோஷம் உள்ளவர்கள் இவ்விரதம் இருந்தால் தோஷம் நீங்கும். சந்திரதிசை நடக்கும் பத்து ஆண்டுகளும் சோமவார விரதம் இருப்பது நல்லது. சிவன் கோவில் சென்று செவ்வரளி மலர்களால் அர்ச்சனை செய்ய வேண்டும். நவக்கிரகங்களை வணங்கி சந்திரபகவான் முன் நின்று.

*"அலைகடல் தனினின்று அன்றுவந் துதித்தபோது*
*கலைவளர் திங்களாகிக் கடவுளரெவரும் ஏத்தும்*
*சிலைநுதல் உமையாள் பங்கன் செஞ்சடை பிறையாயாமே*
*மலைவல மாகவந்த மதியமே போற்றி போற்றி"*

என்னும் தோத்திரத்தைப் பாடுதல் வேண்டும்.

சந்திரனுக்குகந்த பச்சரிசி ஏழைகட்குத் தானம் செய்ய வேண்டும். சந்திர தோஷம் உள்ளவர்கள் நல்முத்தை மோத்திரத்திற் செய்து அணிந்தால் நன்மை கிடைக்கும். இவ்விரதம் இருப்பவர்கட்கு இல்லற நன்மை கிடைக்கும்.

### செவ்வாய்க்கிழமை விரதம்

ஜாதகத்திற் செவ்வாய் தோஷமும், அங்காரக தோஷமும் செவ்வாய் நீசமடைந்தவர்கள், செவ்வாய்திசை நடப்பவர்கள் செவ்வாய்க்கிழமை விரதம்இருக்க வேண்டும்.

அதிகாலை எழுந்து குளித்து, சிவப்பு நிறஆடை அணிந்து அம்மன் கோவிலுக்குச் சென்ற செந்நிறமலர், அல்லது செண்பக மலர்களால் அர்ச்சனை செய்யவேண்டும். நிவேதனத்திற்குச் செந்நிறக் கனிகள் உகந்தது. காலையில் அம்மனையும் மாலையில் முருகனையும் வழிபட வேண்டும்.

*"வசன நற்றெரியலோடு மன்னர் சபையில் வார்த்தை*
*புஜபல பராக்கிரமங்கள் போர்தனில் பெற்றியாண்மை*
*நிஜமுடன் அவரவர்க்கு நீனிலந்த தலையளிக்குங்*
*குகனரன் மகனாம் செவ்வாய் குமைகழல் போற்றி போற்றி"*

என்னும் தோத்திரப் பாடலை நவக்கிரகச் சன்னதியில், செவ்வாய் பெண்களுக்கு மஞ்சள். குங்குமம், தாம்பூலம் கொடுக்க வேண்டும். செம்பவளத்தினை மோதிரத்திலோ, கழுத்துச் சங்கிலியிலோ அமைக்க வேண்டும்.

இவ்விரதம் இருப்பவர்கட்கு அம்மன் அருளும் கிட்டும் இரத்த சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

## புதன் கிழமை விரதம்

மாகாவிஷ்ணுவின் அருள்வேண்டி புதன்கிழமை விரதம் இருந்தால் கல்வி ஞானம் தனம் பெருகும், புதன் தோஷம், புதன் நீசமாயிருப்பவர்கள் இவ்விரதம் இருக்க வேண்டும். இதனை ஆண்கள், பெண்கள் சிறுவர் சிறுமியர் அனைவரும் இருக்கலாம்.

அதிகாலையில் எழுந்து குளித்து பச்சைநிற ஆடை அணிந்து மகாவிஷ்ணு சந்நிதி சென்று வெண்காந்த மலர் மாலை சூட்டி, பச்சைப்பயிறு கலந்த சர்க்கரைப் பொங்கல் , பழம் பொரிகடலை இவற்றை நிவேதனமாகக்கொண்டு விஷ்ணு தோத்திரம் சொல்லி வழிபட வேண்டும்.

நவக்கிரக சன்னிதியில் புத பகவான் முன் நின்று

*"மதனநூல் முதலா நான்கு மறைபுகல் கல்விஞானம்
விதமுடன் அவரவர்கட்கு விஞ்சைகளருள் வோன்றிங்கள்
சுதன்கன பசுபாக்கியம் சுகம்பல கொடுக்கவல்லான்
புதன்கவிப்புலவன் சீர்மால் பொன்னடி போற்றி போற்றி"*

என்னும் தோத்திரம் கூறி வணங்க வேண்டும்.

## வியாழக்கிழமை விரதம்

குரு பகவானுக்குகந்த நாளாம் வியாழனன்று விரதம் இருந்தால் எல்லா நலன்களும் கிட்டும் இதனை குருவார விரதம் என்றும் கூறுவர்.



ஜாதகத்தில் குரு நீசமடைந்தவர்கள் இவ்விரதம் இருக்க வேண்டும். ஏழ்மையில் இருப்பவர்களும் திருமணம் ஆகாதவர்களும், குடும்பத்தைப் பிரிந்தவர்களும் இவ்விரதம் இருக்கலாம் குறைகள் நீங்கும்,

வியாழக்கிழமை ஸ்ரீ ராவேந்திரர், குருவாயூரப்பன், குருபகவான் போன்ற கடவுளை எண்ணிப் பூஜை செய்யலாம், அந்நாளில் புதனுக் குரிய பொன்னிற ஆடை அணிய வேண்டும். நவக்கிரகத்தைச் சுற்றி வந்து வியாழபகவான் முன்னின்று

*மறைமிகு கலைநூல் வல்லோன் வானவர்க் காசான் மந்திரி
நறைசொரி கற்பகம் பொன் நாட்டினுக்கு அதிபனாகி
நிறைதனம் சிவிகை மண்ணின் வீடுபோகத்தை நல்கும்
இறைவன் குருவியாழன் இருமலர்ப்பாதம் போற்றி"*

என்னும் தோத்திரம் கூறி வணங்க வேண்டும் புஷ்பராகக் கல்லை மோதிரமாக அணிவது நலம்

## வெள்ளிக்கிழமை விரதம்

ஜாதகத்திற் சுக்கிரன் நீசம் பெற்றிருந்தாலும், பாவக்கிரகப் பார்வையினாற் சுக்கிரன் பலமிழந்திருந் தாலும் இவ்விரதம் இருந்தால் தொல்லைகள் நீங்கி நலன்கள் கிட்டும்.



இவ்விரதத்தினைச் சுக்கிர வார விரதம் என்றும் அழைப்பர். இது முருகனையும், அம்பாளையும் நோக்கி இருக்கும் விரதம் ஆகும். சிலர் அவரவர் கிராம தேவதைகளையும் வணங்கி மேற்கொள்வர். சூரிய உதயத்திற்குமுன் குளித்து, வெளிர்நீல ஆடை அணிந்து, அம்மன் கோவிலுக்குச் சென்று, வெண்தாமரை மாலகளால் அர்ச்சனை செய்வர்

நவக்கிரக சன்னிதிக்குச் சென்று சுக்கிர பகவானை வணங்கி,

"மூர்க்கலான் சூரவாணன் முதலினோர் குருவாம்வையம்
காக்கவான் மழை பெய்விக்கும் கவிமகன் கனக மீலோன்
சீர்க்கவானவர் போற்செத்தவர் தமை எழுப்பும்
பார்க்கவன் சுக்ராச்சாரி பாதபங்கயமே போற்றி"

என்னும் தோத்திரம் கூறி வணங்க வேண்டும். வைரக்கல்லை ஆபரணங்களில் அணிந்தால் நலம் தரும்

## சனிக்கிழமை விரதம்



சனிஸ்வர பகவானுக்குரிய சனிக்கிழமையில் திருப்பதி வேங்கடசலபதி அருள்வேண்டி இருக்கும் விரதம் ஆகும்.

ஜாதகத்தில் சனி நீசமாக இருந்தாலும், பகை வீட்டில் இருந்தாலும், அர்த்தாஷ்டமச்சனி இருந்தாலும், இவ்விரதம் இருந்தால் நன்மை கிட்டும் தொல்லைகள் குறையும்.

ஒவ்வொரு வாரமும் விரதம் இருக்கலாம். முடியாதவர்கள் புரட்டாதி மாதம் மட்டுமாவது இருக்க வேண்டும். சூரிய உதயத்தில் எழுந்து குளித்து, கறுப்பு நிற ஆடை அணிந்து, நெற்றியில் நாமக்குறியிட்டுப் பெருமாள் சன்னிதிக்குச் சென்று வழிபட வேண்டும். துளசி, இளநீர் கொண்டு வணங்க வேண்டும். இனிப்பும் எள்ளும் கலந்து இடித்து காக்கைகளுக்குப் போட வேண்டும்.

சிவன் கோவிலில் கருங்குவளை மலர்களால் அர்ச்சனை செய்யவேண்டும். மாலையில் நவக்கிரங்கங்களை வணங்கி, சனீஸ்வர பகவானுக்குக் கருங்குவளை மலர் மாலை அணிவித்து எள்ளைச் சிறுதுணியிற் கட்டி நல்லெண்ணெய் ஊற்றித் தீபம் ஏற்ற வேண்டும். எள்ளும் இனிப்பும் கலந்து பிரசாதம் கொடுக்க வேண்டும்.

*"முனிவர்களோ யெனினும் மூர்த்திகள் முதலினோர்கள்*
*மனிதர்கள் சகல வாழ்வின் மகிமையில் லாததுண்டோ*
*கனிவுள தெய்வ நீயே; அதிர்சேயே காக மேவுஞ்*
*சனியனே உனைத்துதிக்கும் தமியனேர்க்கருள் செய்வாயே"*

எனத் தோத்திரம் செய்ய வேண்டும்.

சனிதோஷம் உடையவர்கள் நீலக்கல்லை மோதிரமாக அணியலாம். இவ்விரதம் இருந்தால் துன்பங்கள், வறுமைகள் நீங்கித் தொழில் சிறப்புறும்

## ஞாயிற்றுக்கிழமை விரதம்



இதனை ஆதிவிரதம். என்றும் கூறுவர். ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிற் சூரிய உதயத்திற்குமுன் குளித்து சூரியனுக்கு உகந்த தூய வெண்மையான ஆடைகளை அணிந்து சூரிய வணக்கம் செய்யவேண்டும்.

ஞாயிறு சூரியனுக்குரிய நாள். சூரியனுக்கு அதிபதி சிவன். எனவே அருகிலுள்ள சிவன் கோவிலுக்குச் சென்று வெண் பொங்கல் நிவேதனமும், செந்தாமரைப்பூ அர்ச்சனையும் செய்து சிவதோத்திரம் செய்யவேண்டும். நவக்கிரகங்களைச் சுற்றி வலம்வந்து சூரிய கிரக விக்கிரகம் முன்பு

*காசினி இருளை நீக்கும் கதிரொளி ஆகியெங்கும்*
*பூசனை உலோகர் போற்றி புசிப்பெடு சுகத்தை நல்கும்*
*வாசியே உடைய தேர்மேல் மகாநதி வலமாய் வந்த*
*தேசிகா எனை இரட்சிப்பாய் செய்கதிரவனே போற்றி"*

எனும் பரிகாரத் தோத்திரங்களைப் பாட வேண்டும். சூரியனுக்குரியதானியமான கோதுமையினை ஏழைகட்குத் தானமாக வழங்கவேண்டும்.

ஜாதகத்திற் கிரக தோஷம் உள்ளவர்கள், சூரிய திசை நடப்பவர்கள் ஞாயிறு விரதம் இருக்கவேண்டும் ஐப்பசி மாதம் பிறந்தவர்கட்குச் சூரியன் நீசம். எனவே ஞாயிறு விரதம் இருக்கவேண்டும். கிரகதோஷம் உள்ளவர்கள் மாணிக்க மோதிரம் அணிந்தால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

## இராகு பகவான் விரதம்

இராகு திசை நடப்பவர்களும் இராகுதோஷம் உள்ளவர்களும் பரிகாரம் செய்ய இவ்விரதம் இருப்பார்கள் இதனைச் சனிக்கிழமை இருக்க வேண்டும்

அதிகாலையில் எழுந்து குளித்து காளிகோவிலுக்குச் சென்று வேப்பெண்ணேய் விளக்கேற்றி மந்தாரமலர் அர்ச்சனையும் உளுந்தினாற் செய்த பலகாரமும் நிவேதனம் செய்யவேண்டும்.

நவக்கிரகச் சந்நிதியில் வழிபட்டுஇராகு பகவானுக்கு மந்தாரமலர் மாலையிட்டு.

*வாகுசேர் நெடுமாரர் முன்னம் வானவர்க்கமுதமீயப்*
*போகுமக்கா லையுன்றன் புணர்பினாற் சிரமே யற்றுப்*
*பாகுசே மொழியாள் பங்கன், பரசன் கையில் மீண்டும்*
*ராகுவே உனைத் துதிப்பேன் ரட்சிப்பாய் ரட்சிப்பாயே!*

என்னும் தோத்திரத்தைப் பாடவேண்டும்.

கருப்பு ஆடையும் உளுந்தினாற் செய்த பணியாரங்களையும் தானம் கொடுக்கலாம். கோமேதகக் கல்லை ஆபரணங்களிற் சேர்த்து அணிவதும் நலன் தரும்

## கேதுபகவான் விரதம்

கேது திசை நடப்பவர்களும் கேது நீச மடைந்த வர்களும் இவ்விரதம் இருந்து பரிகாரம் தேடலாம். வைடூரியக்கல்லை ஆபரணத்திற் சேர்த்து அணியலாம். செவ்வாயன்று அதிகாலை எழுந்து குளித்து விநாயகரை வணங்கவேண்டும். விநாயகர் கோவிலுக்குச்சென்று செவ்வலரி மாலை அணிவித்துக் கொள்ளிற் செய்த கொழுக்கட்டை,

மோதகம் நிவேதனம் செய்யவேண்டும். நவக்கிரக சன்னிதியில் வழிபட்டு கேதுபகவானை வணங்கி

*பொன்னையனுரத்திற் கொண்டோன் புலவர்தம் பொருட்டாவாழி*
*தன்னையே கடைந்து முன்னர் தண்ணமு தளிக்கலுற்ற*
*பின்னையே கரவாலுண்ட பெட்பினிற் சிறம் பெற்றுய்ந்தா*
*யென்னையன் கேதுவே இவ்இருநிலம் போற்றத்தானே.*

எனும் தோத்திரம் பாடி வழிபட வேண்டும்.
கும்பகோணம் அருகே சூரியனார் கோவில் - சூரிய திசை
திருப்பதி வெங்கடாசலபதி - சந்திரக்கிரகம்
பழனி முருகன் - அங்காரகன் செவ்வாய் தோஷம்
மதுரை மீனாட்சி - புதன் பரிகாரம்
திருச்செந்தூர் - குருபகவான்
ஸ்ரீரங்கம் - சுக்கிரகிரகம்
திருநள்ளாறு - சனி
காளஸ்திரி - ராகு

## மங்கள கௌரி விரதம்

திருமணம் ஆன பெண்கள் மாங்கல்ய பலத்திற்காகச் செய்யும் விரதம் ஆகும். இதனைப் பெண்கள் மட்டுமே செய்ய வேண்டும். அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களைக் கழித்து, குளித்து வீட்டினைச் சுத்தம் செய்து மெழுகிக் கோலமிட வேண்டும்.

திருவிளக்கில் 16 திரிகள் இட்டு நெய் விட்டு , திருவிளக்கு ஏற்றவேண்டும். திருவிளக்கின் முன் பூசைச் சாமான்களுடன் மஞ்சள்,குங்குமம், அரிசி வெல்லம், வெற்றிலை பாக்கு, பழம் கடலை இரவிக்கைத் துண்டுகளை வைத்து வழிபாடு செய்யவேண்டும. வழிபாடு முடிந்தவுடன் விரதம் இருப்பவரின் தாய் சுமங்கலியாக இருப்பின் அவருக்கும் அல்லது வேறு சுமங்கலிப் பெண்ணுக்கும் தானமாகக் கொடுக்கவேண்டும். பின்னர் விளக்குத் திரியினை ஏற்றி (அணைத்து)

அதன் முனையில் உள்ள கருப்புச் சாந்தினை நெற்றியில் இட வேண்டும் பின் அப்பெண்ணுக்கு உணவு அளிக்கவேண்டும். தாம்பூலம் கொடுக்கவேண்டும். அதன் பின்னரே விரதம் இருப்பவர் உண்ணவேண்டும்.

மங்கள கௌரி விரதத்தினைத் திருமணமான முதல் ஆண்டு தாய் வீட்டிலும் , பின் நான்கு ஆண்டுகள் கணவன் வீட்டிலும் செய்தல் வேண்டும். இவ்வாறு ஐந்து ஆண்டுகள்விரதம் இருப்பவர்கட்கு நீண்ட ஆயுளும் திருமாங்கலயப் பலனும் கிட்டும்.

## சோமவார விரதம்



திங்கட்கிழமை சோமவாரம் எனப்படும். கார்த்திகை மாதம் முதல் திங்கட்கிழமையில் ஆரம்பித்து விதிமுறைப்படி செய்தல் வேண்டும். இவ்விரதத்தைப் போலச் சிவபெருமானுக்கு விருப்பமான விரதம் வேறொன்றும் இல்லை. சந்திரன் இவ்விரதம் இருந்ததாலேயே சிவனின் திருச்சடையில் வீற்றிருக்கும் பேறு பெற்றார்.

நீராடி நித்திய கருமங்கள் முடித்து சிவ பூஜை செய்து ஒரு வேதியரையும் அவர் மனைவியையும் அழைத்து அவர்களைச் சிவனாகவும்உமையாகவும் பாவித்து இயன்றவரை தானம் செய்தல் வேண்டும் சிவபூஜை செய்ய வாய்ப்பு இல்லாதவர்கள் ஆலயம் சென்று பஞ்சாமிர்தத்தினால் அபிஷேக அர்ச்சனைகள் செய்து பிராமணர்கட்கு உணவளித்து, அடியார்கட்கும் உணவளித்து அன்று முழுவதும் உபவாசம் இருக்கவேண்டும். இவ்வாறு விரதம் இருப்பவர்கள் கைலாய பதவியடைவார்கள்.

## மகாலட்சுமி விரதம்

ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக்கிழமை அன்று காலை குளித்து ஆசாரத்துடன் விநாயகர், அனந்தபத்மநாபன் மகாலட்சுமி தேவியரை வணங்க வேண்டும் மகாலட்சுமி தோத்திரம் சொல்ல வேண்டும். இதனால் அஷ்ட ஐஸ்வரியங்களும் கிடைக்கும்.

## பராசக்தி விரதம்

ஒவ்வொரு மாதமும் கடைசிச் செவ்வாயன்று காலை குளித்து ஆசாரத்துடன் மேற்கொள்ள வேண்டும். விநாயகரை வணங்கி, பின் பராசக்தி பார்வதி தேவியர் படத்தை செந்நிறமலர்கள் சூட்டி வழிபட வேண்டும் பகல் மட்டுமே அன்னதானத்திற்குப் பின் உண்ணவேண்டும். இதனால் மாங்கல்ய பலன்கிட்டும்.

## திருவோண விரதம்

ஒவ்வொரு மாதமும் திருவோண நட்சத்திரத்தன்று விரதம் இருக்கவேண்டும். அதிகாலை குளித்து ஆசாரத்துடன் உணவு உண்ணாது விஷ்ணு கோவில் சென்று அர்ச்சனை செய்து வழிபட வேண்டும் பகல் உணவு தருமம் செய்தபின் உண்ண வேண்டும்.

இதையொட்டியே ஒவ்வொரு நாளிலும் குறிப்பிட்ட காலத்தை ராகுகாலம், எமகண்டம், குளிகண் எனப் பிரித்தனர். இதில் ராகுகாலம் எமகண்டம் காலத்தில் நல்லவை செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் குளிகன் காலம் நல்ல நேரம் என்றும் கூறுவர். இவ்வகையில் ராகு காலத்தில் எந்தக்காரியமும் தொடங்குவதில்லை.

ஆனால் ராகு காலம் தான் துர்க்கையை வழிபாடு செய்ய ஏற்றகாலம் ஆகும். இந்த இராகு காலத்தில் துர்க்காதேவியை வழிபடுவது சிறப்பாகும். திருவாரூரில் இராகுகால துர்க்கை அம்மனுக்குத் தனிச்

சன்னதி உள்ளது. இவ்வழிபாடு செய்பவர்கட்குச் சகல செல்வங்களும் கிடைக்கும்.

## ஐயப்பன் வழிபாடு



கலியுகக் கண்கண்ட தெய்வமான ஐயப்பனை வழிபாடு செய்வது மிகவும் சிறப்பாகும். இதற்காக இருக்கும் விரதம் மிகவும் கட்டுப்பாடு கொண்ட தாகும்.

சபரிமலைசாஸ்தா கோயிலுக்குச் செல்பவர்கள் இருமுடி தரிக்க வேண்டும் ஆண்களில் எல்லா வயதின ரும் பெண்களிற் பத்து வயதுக்கு உட்பட்டவரும் 50 வயதுக்கு மேற்பட்டவர்களும் இருமுடி தரிக்கலாம். கார்த்திகை, மார்கழி, தை ஆவணி மாதங்கள் மட்டுமே கோயிலுக்குச் செல்லாம். கார்த்திகை முழுவதும் கோவில் திறந்திருக்கும் ஆவணியில் இரு தினங்கள் மட்டுமே திறந்திருக்கும் குருநாதரைக் கொண்டு மாலை போட வேண்டும். புகைபிடித்தல், புலால் உண்ணல், மது மங்கையரைத் தொடுதலை நீக்கவேண்டும். சவரம் செய்யக் கூடாது.

காலை மாலை இருவேளையும் குளிர்ந்த நீரிற் குளித்து ஐயப்பபூசை செய்யவேண்டும். தாமே உணவு சமைத்து உண்ணவேண்டும். கறுப்பு அல்லது நீல நிற உடையணிய வேண்டும் நாற்பத்தெட்டு நாட்கள் விரதம் இருந்து ஐயப்பன் கோவில் செல்ல வேண்டும்.

கோவிலில் உள்ள பதினெட்டுப் படிகளில், தான் செல்லும் ஆண்டுக்கேற்ப அந்த அந்தப் படிகளிற் பூசை செய்து வரவேண்டும். அவ்வாறு பதினெட்டு முறை சென்று பதினெட்டுப் படிகளைப் பூசை செய்பவர்கட்கு இப்பிறவிப் பாவங்கள் நீங்கி மறுபிறவி நீங்கும். மகரஜோதி காண்பது மிகவு சிறப்பாகும்.

## சனிபகவான் வழிபாடு



நவக்கிரகங்களிற் சூரியன், சனி இருவருக்கும் மட்டுமே தனிக் கோவில்கள் உள்ளன. இதில் சனி பகவானுக்குத் திருநாள்ளாறிற் கோயில் உள்ளது. சனிதோஷம் சனிதிசை நடப்பவர்கள், அர்த்தமத்தில் சனி, ஏழரை நாட்டுச் சனி போன்ற சனிதிசை உள்ளவர்கள் திருநள்ளாறு சென்று சனி பகவானை வழிபட்டாற் சனி பகவான் அருளால் தோஷங்கள் நீங்கும். தொல்லைகள் குறையும். உடல் ஊனமுற்றவர்கள். மனவளர்ச்சி குன்றியவர்கள் திருநள்ளாறில் ஒரு மண்டலம் தங்கி விரதம் இருந்தால் நலம் கிடைக்கும்.

சனி ஒரு திசையிலிருந்து இடம் பெயரும் சனிப் பெயர்ச்சியின் போது திருநள்ளாறில் விஷேட வழிபாடு நடைபெறும். சனிப் பெயர்ச்சியினால் ஏற்படும் தொல்லை களினின்று நீங்க திருநள்ளாறு சென்று சனிபகவானை வழிபடுவர்.

*சங்கடம் நீக்கும் சனிபகவானே*
*மங்கலம் பொங்க மனம் வைத்தருள்வாய்*
*சக்கரவின்றி சாகா நெறியில்*
*இச்செகம் வாழ இன்னருள் தாதா*

# பயன்தரும் சில முக்கியமான ஆன்மீகக் குறிப்புக்கள்



நம் வாழ்க்கையில் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய பல நெறிமுறைகளும், இந்து தர்மக் கோட்பாடுகளும், தோத்திரங்களும் சொல்லப்பட்டுள்ளன.

## 1. திருக்கோவில்களில் வழிபாடு செய்யும் முறை

கோயிலின் அருகிற் சென்றதும் கைகால்களைக் கழுவிக் கொண்டு கோபுரத்தின் முன் நின்று இருகரங்களையும் தலைமேற் குவித்து மூலமந்திரத்தை உச்சரித்து, தோத்திரப் பாடல்களை மன ஒருமைப்பாட்டுடன் பாடி கோபுரத்தை ஸ்தூலலிங்கமாகவும் கடவுள் பாதமாகவும் பாவித்து வணங்கிக் கோவிலுக்குட் போக வேண்டும்.

கொடி மரத்தின் பக்கம் சென்றதும் ஆண்கள் 8 அவயங்களும் பூமியிற்பட (அஷ்டாங்க நமஸ்காரம்) பெண்கள் 5 அவயங்கள் பூமியிற்பட (பஞ்சாங்க நமஸ்காரம்) செய்தல் வேண்டும். கொடி மரத்தைச் சூட்சும லிங்கமாக எண்ணி வணங்கவேண்டும்.

ஓம் சிவாயநம என்னும் மூலம் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு பிரகாரங்களை வலம் வரவேண்டும் ஐந்து பிரகாரங்கள் இருந்தால் ஐந்தையும் பஞ்ச கோசங்களாக வணங்கி பிரகாரங்களை வலம் வந்து பலிபீடத்தின் அருகிற் சென்று நம்மிடமுள்ள காம குரோத லோப, மோக மத மாச்சரியங்களைப் பலிகொடுத்ததாக உறுதி மேற்கொள்ள வேண்டும்.

கன்னி மூலையிலிருக்கும் விநாயகரை வலக்கையை இடக்கை முன்வைத்து, வலக்கையால் இடக்காதையும், இடக்கையால் வலக்காதையும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தோப்புக்கரணமிட்டு விநாயகர் தோத்திரம் செய்து வணங்க வேண்டும். பின் துவார பாலக

விக்கிரகங்கள் முன் சென்று, இறைவனை வணங்க அனுமதி தருமாறு வேண்டிக் கொண்டு சந்நிதியிற் சென்று இறைவனை வணங்கித் தோத்திரப்பாக்களைப் பாடவேண்டும்.

தேங்காய் பழம் முதலிய நிவேதனப் பொருட்களை நிவேதிக்கச் செய்யலாம். கற்பூர தரிசனம் செய்து, திருநீறு பெற்று மூலஸ்தான மூர்த்தியை வணங்கியபின் இதேபோல் அம்பிகை சந்நிதியிலும் வணங்குதல் வேண்டும். உட்பிரகாரங்களில் இருக்கும் எல்லா மூர்த்திகளையம் வணங்கி வலம் வரவேண்டும் தட்சணாமூர்த்தியைக் குருவாகப் பாவித்து வணங்க வேண்டும்.

பின் முருக சந்நிதியில் வணங்கி சண்டேசுரர் சந்நிதியை டைந்து சிவத்தியானத்திலிருக்கும் அவரிடம் மூன்று முறை கையாற் கொட்டி, அவர் நம்மைப் பார்ப்பதாகக் கருதி சிவதரிசன பலனை வேண்டிப் பிரார்த்திக்கவேண்டும்.

பின் நவக்கிரகங்களை வணங்க வேண்டும். ஆலய தரிசனம் முடிந்தபின் கொடிமரத்திற்குச் சற்றுத் தூரம் விலகியிருந்து உள்ளேயுள்ள மூர்த்தியின் மூல மந்திரத்தை நூற்று எட்டு முறை ஜெபித்தபின் வீடு திரும்ப வேண்டும்.

விஷ்ணு ஆலயமாயின் கருடாழ்வாரை வணங்கி மூலஸ்தான மூர்த்தியின் முன் திவ்ய பரபந்தப் பாடல் பாடி துளசி தீர்த்தம் பெற்று சடாரி சாத்தப் பெற்று மூர்த்தியைத் தியானித்துத் தாயார் சந்நிதானம் சென்று சேவித்து வலம் வரும் போது உட்பிரகாரத்திலுள்ள மூர்த்திகளை வணங்கி, பின் கொடிமரத்திற்குச் சற்றுத் தூரத்தில் அமர்ந்து, மூல மந்திரத்தை 108 முறை ஜெபித்தபின் வீடு திரும்ப வேண்டும்.

வடக் கு நோக்கிய சந்நிதி மேற்கு நோக்கிய சந்நிதிகளில் இடப்பக்கமும் கிழக்கு நோக்கிய சந்நிதி, தெற்கு நோக்கிய சந்நிதியாயின் வலப்பக்கத்திலும் நின்று விழுந்து வணங்குதல் வேண்டும் மூன்று ஐந்து ஏழு ஒன்பது முறை வணங்கலாம் ஒரு முறை அல்லது இரு முறை வணங்குதல் குற்றம் என்பர்.

நாடேறும் சிவாலய வழிபாடு செய்தல் வேண்டும். இயலாதவர்களும் சோமவாரம் மங்களவாரம் சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை திருவாதிரை கார்த்திகை மாதப்பிறப்பு சூரிய சந்திர கிரகணம் சிவராத்திரி நவராத்திரி விநாயகர் சதுர்த்தி விநாயகர் சஷ்டி கந்தர் சஷ்டி ஆகிய புண்ணிய காலங்களிலாவது தவறாமல் ஆலய வழிபாடு செய்தல் வேண்டும்.

ஆண்கள் அஷ்டாங்கப் பணிவு என்னும் முறைப்படி விழுந்து வணங்குதல் வேண்டும். மனித உடலின் 8 அங்கங்களும் இறைவனின் திருமுன் தரையிற் படுமாறு விழுந்து வணங்குதல் அட்டாங்கப் பணிவு ஆகும். தலை இரண்டு செவிகள் இரண்டு கைகள் இரண்டு கால்கள் முகவாய்க்கட்டை என்ற எட்டு உறுப்புக்ளும் வணங்கும் போது தரையிற்பட வணங்கவேண்டும்

பெண்கள் பங்சாங்கப் பணிவு என்னும் முறைப்படி விழுந்து வணங்க வேண்டும். அது தலை இருகைகள், இரு முழங்கால்கள் ஆகிய ஐந்து உறுப்புகளும் தரையில் தொடவணங்குதல் வேண்டும். கொடிமரத்தின் முன்பு 3, 5, 7 முறை பணிந்து வணங்குதல் வேண்டும் ஒரு முறை இருமுறை விழுந்து வணங்குதல் குற்றம் வணங்கும் போது மேற்கேயோ தெற்கேயோ கால் நீட்ட வேண்டும் கிழக்கிலும் வடக்கிலும் கால் நீட்டக்கூடாது.

கோவிலின் உட்பிரகாரத்திற் பல மூர்த்திகள் இருப்பதாலும் அதிதேவதைகள் சூட்சமமாக இருப்பதாலும் அங்கே கால் நீட்டி விழுந்து வணங்கக் கூடாது விநாயகரை ஒருமுறையும் முருகனை மூன்று முறையும் சிவபெருமானை 3, 7, 9, 15, 21 முறைகளும் உமாதேவி திருமாலை நன்நான்கு முறையும் சூரியனை இரண்டு முறையும் இதர கடவுளரை 3 முறையும் சக்திகளை 4 முறையும் வலம் வருதல் வேண்டும்.

ஆரோக்கியம் பெற ஆதித்தனையும் செல்வம் பெற அக்னியையும் ஞானம் பெற முருகனையும் சுகம் பெற திருமாலையும் ஆற்றல் பெற அம்பிகையையும் வணங்குதல் வேண்டும்.

## 2. அருள் மிகு திருத்தலங்கள்

தென்திசைக்கயிலை: திருக்காளத்தி திருச்சி திருக்கோண மலை

**அட்ட வீரட்டங்கள் :** (சிவபிரான் புரிந்த எட்டு வீரச் செயல்களைத் தன்னகத்தே கொண்ட தலங்கள்) திருக்கண்டியூர், திருக்கோவலூர் திருவதிகை திருப்பறியலூர் திருவிற்குடி, திருவழுவூர் திருக்குறுக்கை திருக்கடவூர்

**காசிக்குச் சமமான தலங்கள்:** திருவெண்காடு, திருவையாறு,ஈ திருமயிலாடுதுறை, திருவிடை மருதூர் திருச்சாய்க்காடு திருமுது குன்றம் (விருத்தாசலம்) திருவாஞ்சியம்

**நவத்திருப்பதிகள்:** 1 ஸ்ரீ வைகுண்டம் 2 ஆழ்வார் திருநகரி, 3 தென் திருப்பேரை 4 தொலைவல்லி மங்களத்தில் அரவிந்தலோசனன் சன்னிதி தனியாக உள்ளதனையும் சேர்க்க வேண்டும்.

## 3. மூலம் மந்திரங்கள்

| | | |
|---|---|---|
| சிவன் | - | ஓம் நமசிவாய |
| விஷ்ணு | - | ஓம் நமோ நாராயணா |
| தேவி | - | ஓம் உமாதேவ்யை நம |
| கணபதி | - | ஓம் கணபதியே நம |
| சுப்பிரமணியர் | - | ஓம் சரவணபவாய நம |
| சாஸ்தா | - | ஓம் சாஸத்ர மூர்த்தியே நம |

## 4. பஞ்ச பூதத் தலங்கள்

| | | |
|---|---|---|
| 1. காஞ்சீபுரம் திருவாரூர் | - பிருத்வித்தலம் | - மண் |
| 2. திருவானைக்கா | - அப்புத்தலம் | - நீர் |
| 3. திருவண்ணாமலை | - தேயுத்தலம் | - நெருப்பு |
| 4. திருக்காளத்தி | - வாயுத்தலம் | - காற்று |
| 5. சிதம்பரம் | - ஆகாசத்தலம் | - விண் |

## 5. பஞ்ச சபைகள்

1. திருவாலங்காடு - இரத்தின சபை
2. சிதம்பரம் - கனகசபை
3. மதுரை - ரஜத சபை (வெள்ளி)
4. திருநெல்வேலி - தாமிரசபை
5. திருக்குற்றாலம் - சித்திர சபை



## 6. பன்னிரு சோதிலிங்கத் தலங்கள்

1. சோமநாதபுரம் - சௌராஷ்டிரம்
2. ஸ்ரீசைலம் - ஆந்திரா
3. உஜ்ஜயினி - மஹாராஷ்டிரம்
4. மாந்தாதா - மஹாராஷ்டிரம்
5. பரலி - மத்திய பிரதேசம்
6. டாகினி - மஹாராஷ்டிரம்
7. இராமேஸ்வரம் - தமிழ்நாடு
8. தாருகாவனம் - மஹாராஷ்டிரம்
9. ஸ்ரீகாசி - உத்திரப்பிரதேசம்
10. கௌதமி தீரம் - மஹாராஷ்டிரம்
11. ஹிமாலயம் - உத்திரப்பிரதேசம்
12. குங்குணேசம் - மஹாராஷ்டிரம்



## 7. சப்த மாதர்கள்

1. அபிராமி
2. வைணவி
3. மகேஸ்வரி
4. கௌமாரி
5. வாராகி
6. நரசிம்மி
7. இந்திராணி

(இவர்கள் முறையே பிரம்மா விஷ்ணு மகேசுவரன் குமாரன் வராகமூர்த்தி, நரசிம்ம மூர்த்தி, இந்திரன் சக்தி எனப்படுவர்)

## 8 நவசக்திகள்

1. மனோன்மணி, 2. ர்வ பூததமணி
3. பலப்பிரமமணி 4. கலனிகரணி
5. பலவிகரணி 6. காளி
7. இரவுத்திரி 8. ஜேஷ்டை
9. வாமை



1. மாகேசுவரி 2. கௌமாரி 3. வாராகி
4. மகாலட்சுமி 5. வைஷ்ணவி 6. இந்திராணி
7 . பிராம்மி 8. நரசிம்ஹி 9. சாமுண்டி

என்றும் கூறுவர்.

## ௯. முக்கியமான அம்பிகைத் தலங்கள்

| | | |
|---|---|---|
| 1. | திருவொற்றியூர் | - வடிவுடையம்பாள் |
| 2. | திருமயிலை | - கற்பகாம்பாள் |
| 3. | காஞ்சிபுரம் | - காமாட்சி |
| 4. | திருவண்ணாமலை | - உண்ணா முலையம்மை |
| 5. | சிதம்பரம் | - சிவகாமி மாகாளி |
| 6. | திருவானைக்கா | - அகிலாண்டேஸ்வரி |
| 7. | திருக்குழுக்குன்றம் | - திரிவுபரசந்தரி |
| 8. | திருக்காளத்தி | - ஞானப்பூங்கோதை |
| 9. | திருவையாறு | - அறப்பெருஞ் செல்வி |
| 10. | திருவாரூர் | - கமலாம்பிகை |
| 11. | கும்பகோணம் | - மங்களநாயகி |
| 12. | நாகப்பட்டினம் | - நீலாயதாக்ஷி |
| 13. | திருக்குற்றாலம் | - குழல்வாய் மொழி பராசக்தி |
| 14. | திருநள்ளாறு | - மோகமார்த்த பூண்முலை யம்மை |
| 15. | திருநேல்வேலி | - காந்தி மதி |
| 16. | வைத்தீஸ்வரன் கோவில் | - தையல் நாயகி |
| 17. | திருக்கடவூர் | - அபிராமி |
| 18. | மதுரை | - மீனாட்சி |

| | | | |
|---|---|---|---|
| 19. | இராமேஸ்வரம் | - | பர்வதவர்த்தினி |
| 20. | கன்னியாகுமரி | - | பகவதி |
| 21. | திருவேற்காடு | - | ஸ்ரீதேவி கருமாரி |
| 22. | வேதாரண்யம் | - | யாழைப்பழித்த மொழி அம்மை |
| 23. | மாயூரம் | - | அவயாம்பிகை |
| 24. | திருச்சி | - | மட்டுவார் குழலி |
| 25. | காசி | - | விசாலாட்சி |
| 26. | அருணாசலத்து | - | அபீதகுசாம்பிகை |
| 27. | பாபநாசம் | - | உலகம்மை |
| 28. | வேதாரண்யம் | - | சுந்தரி |
| 29. | நாகப்பட்டினம் | - | நீலாயதாக்ஷி |
| 30. | கருகாவூர் | - | கர்ப்பகாம்பிகை |
| 31 | குல சேகரப்பட்டனம் | - | அறம் வளர்த்த நாயகி |
| 32. | கொல்லூர் | - | மூகாம்பிகை |
| 33. | மாங்காடு | - | காமாக்ஷி |
| 34. | திருவாமாத்தூர | - | வட்டப்பாரையம்மன் |
| 35. | அம்பரத்தூர் | - | பத்திரகாளி |
| 36. | சமயபுரம் | - | மகாமாயி |
| 37. | கோவை | - | கோனியம்மன் . |
| 38. | சென்னை | - | காளியம்பாள் |
| 39. | சேலம் | - | கோட்டை மாரி |
| 40. | புதுக்கோட்டை | - | புவனேஸ்வரி |
| 41. | தஞ்சை | - | மாரியம்மாள் |
| 42. | கருவாரைக்கரை | - | காமாக்ஷி |
| 43. | திருவாலங்காடு | - | மகாமாரியம்மன் |
| 44. | உப்பிலி பாளையம் | - | தண்டு மாரியம்மன் |
| 45. | இடுக்கன் குடி | - | மகாமாரியம்மன் |
| 46. | புதுவை | - | செங்கழுநீர் அம்மன் |
| 47. | கோலியனூர் | - | பிட்லாயம்மன் |
| 48. | தொட்டியம் | - | மதுரை காளியம்மன் |
| 49. | கந்தகிரி | - | புவனேஸ்வரி |
| 50. | பெரிய பாளையம் | - | பவானி |
| 51. | பண்ணாரி | - | மாரியம்மன் |

| | | | |
|---|---|---|---|
| 52 | மயிலை (சென்னை) | - | எல்லையம்மன் கோல விழியம் மன் முண்டகக் கன்னியம்மன் |
| 53 | கந்தகிரி | - | புவனேஸ்வரி |
| 54. | திருமுல்லை வாயில் | - | கொடியிடை நாயகி |
| 55. | சூலூர்பேட்டை | - | செங்காளம்மன் |
| 56. | ஒரிகண்டா | - | ஜவாலாமுகி |
| 57. | சோற்றானிக்கரை | - | பகவதி |
| 58. | செங்கனூர் | - | பகவதி |
| 59. | மண்டைக்காடு | - | பகவதி |
| 60. | மைசூர் | - | சாமுண்டீஷ்வரி |

## தேவி பாகவதத்திற் கூறப்பட்டள்ள 108 சக்தி பீடங்களில் முக்கியமான 51 பீடங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | - | ஸ்ரீ சக்கரப்பீடம் தேவியின் எலும்பு விழுந்த இடம் |
| 2. | மதுரை | - | மந்திரிணி பீடம் |
| 3. | திருவானைக்காவல் | - | வராகி பீடம் |
| 4. | திருக்குற்றாலம் | - | பராசக்திபீடம் |
| 5. | திருவாரூர் | - | கமலைபீடம் |
| 6. | கன்னியாகுமரி | - | தேவியின் பிருஷ்ட பாகம் விழுந்த இடம் |
| 7. | அம்பத்தூர் | - | 51 ஆவது பீடம் |
| 8. | கோகர்ணம் | - | வலது காது விழந்த இடம் |
| 9. | ஸ்ரீசைலம் | - | இடது காது விழுந்த இடம் |
| 10. | புரிபைரவி பீடம் | - | நாபி விழுந்த இடம் |
| 11. | சிருங்கேரி | - | சாரதா |
| 12. | கோலாப்பூர் | - | கண்கள் விழுந்த இடம் |
| 13. | அரசூர் | - | அம்பிகா |
| 14. | ஜலந்தரா | - | ஸ்தனங்கள் விழுந்த இடம் |
| 15. | குஜராத் | | |
| 16. | பிரபாசம் | - | வயிறு விழுந்த இடம் |
| 17. | பராகத் | - | சியாமளாதேவி |
| 18. | சிம்லா | | |

19. மானசரோவர் - காளிகா தலை விழுந்த இடம்
20. காஷ்மீர் - மகாமாயை கழுத்து விழுந்த இடம்
21. நேபாளம் - முழங்கால் விழுந்த இடம்
22. ஜ்வாலாமுகி - நாக்கு விழுந்த இடம்
23. சுகந்தா - மூக்கு விழுந்த இடம்
24. காசி (வாரணாசி) - மணிகர்ணிகை காது குண்டலம் விழுந்த இடம்
25. நைமிசாரண்யம்
26. குருக்ஷேத்திரம் - முழங்கை விழுந்த இடம்
27. பிரயாகை - விரல்கள் விழுந்த இடம்
28. உஜ்ஜயினி - மங்கள சண்டி
29. பிருந்தாவனம் - கூற்தல் விழுந்த இடம்
30. அத்தினாபுரம் - ஜயந்தி
31. கன்யாகுப்ஜம் - கௌரி
32. புஷ்கரம் - புருஷீதை
33. கேதாரம் - சன்மார்க்கத்தாயினி
34. பத்ரை - பத்ரேசுவரி
35. உருத்திரகோடி - உருத்ராணி
36. சாளக்கிராமம் - மகாதேவி
37. மலயாசலம் - கல்யாணி
38. தேவிகாதடம் - நந்தினி
39. சகஸ்நாமம் - உத்பலாக்ஷி
40. வராகசைலம் - ஐயை
41. இரண்யாக்ஷம் - மகோத்பலை
42. திரிகூடபர்வதம் - உருத்திர சுந்தரி
43. சஹ்யபர்வதம் - ஏகவீரை
44. வைத்தியநாதம் - ஆரோக்யை
45. மகாகாளம் - மகேசுவரி
46. விந்தியபர்வதம் - நிதம்பை
48. வேதமுகம் - காயத்திரி
49. ஹேமகூடம் - மன்மதை
50. அமரகண்டம் - சண்டிகை
51. கல்கத்தா - கால்விரல்கள் விழுந்த இடம்

## முப்பத்திரண்டு வகைப்பிள்ளையார்

| | |
|---|---|
| 1. பால விநாயகர் | 2. கருண விநாயகர் |
| 3. பகதி விநாயகர் | 4. வீர விநாயகர் |
| 5. சக்தி விநாயகர் | 6. துவிஜ விநாயகர் |
| 7. சித்திவிநாயகர் | 8. உச்சிஷ்டவிநாயகர் |
| 9. விக்ன விநாயகர் | 10. க்ஷிப்ரவிநாயகர் |
| 11. ஹேரம்ப விநாயகர் | 12. லக்ஷ்மி விநாயகர் |
| 13. மனைவிநாயகர் | 14. விஜய விநாயகர் |
| 15. நித்ய விநாயகர் | 16. வளர்த்துவ விநாயகர் |
| 17. வர விநாயகர் | 18. திரயாட்சர விநாயகர் |
| 19. க்ஷப்ரபிரசாத் விநாயகர் | 20. ஹிரித்ரா விநாயகர் |
| 21. ஏகதர்த்த விநாயகர் | 22. சிருஷ்டி விநாயகர் |
| 23. உத்தண்ட விநாயகர் | 24. ஏகாம்பர விநாயகர் |
| 25. துண்டி விநாயகர் | 26. ரணயோகன விநாயகர் |
| 27. துவிமுக விநாயகர் | 28. திரிமுக விநாயகர் |
| 29. சிம்ம விநாயகர் | 30. யோக விநாயகர் |
| 31. துர்க்க விநாயகர் | 32. சங்கடஹர விநாயகர். |

## 11. அறுபத்து மூன்று நாயன்மார்கள்

| என் பெயர் | மாதம் | நட்சத்திரம் |
|---|---|---|
| 1. திருநீலகண்டர் | தை | விசாகம் |
| 2. இயற்கையார் | மார்கழி | உத்திரம் |
| 3. இளையான் குடிமாறர் | ஆவணி | மகம் |
| 4. மெய்ப்பொருள் வேந்தர் | கார்த்திகை | உத்திரம் |
| 5. விறன்மிண்டர் | சித்திரை | திருவாதிரை |
| 6 அமர்நீதியார் | ஆனி | பூரம் |
| 7. எறிபத்தர் | மாசி | அத்தம் |
| 8. ஏனாதிநாதர் | புரட்டாதி | உத்திராடம் |
| 9. கண்ணப்பர் | தை | மிருகசீரிடம் |
| 10. குங்கிலியக்கலயர் | ஆவணி | மூலம் |
| 11. மானக்கஞ்சாரர் | மார்கழி | சுவாதி |

| | | |
|---|---|---|
| 12. அரிவாட்டாயர் | தை | திருவாதிரை |
| 13. ஆனாயர் | கார்த்திகை | அத்தம் |
| 14. மூர்த்தியார் | ஆடி | கார்த்திகை |
| 15. முருகர் | வைகாசி | மூலம் |
| 16. உருத்திரபசுபதியார் | புரட்டாதி | அசுவினி |
| 17. திருநாளைப்போவார் | புரட்டாதி | ரோகியி |
| 18. திருநாவுக்கரசர் | சித்திரை | சதயம் |
| 19. சண்டேசுவரர் | தை | உத்திரம் |
| 20. திருநாவுக்கரசர் | சித்திரை | சதயம் |
| 21. குலச்சிறையார் | ஆவணி | அனுஷம் |
| 22. பெருமிழலைக்குறும்பர் | ஆடி | சித்திரை |
| 23. காரைக்கால் அம்மையார் | பங்குனி | சுவாதி |
| 24. அப்பூதி அடிகள் | தை | சதயம் |
| 25. திருநீலநக்கர் | வைகாசி | மூலம் |
| 26. நமிநந்தியார் | வைகாசி | பூசம் |
| 27. திருஞானசம்பந்தர் | வைகாசி | மூலம் |
| 28. ஏயர்கோன் கலிக்காமர் | ஆனி | ரேவதி |
| 29. திருமூலர் ஐப்பசி | அச்சுவினி | |
| 30. தண்டிஅடிகள் | பங்கு | சதயம் |
| 31. மூர்க்கர் | கார்த்திகை | மூலம் |
| 32. சோமாசி மாறர் | வைகாசி | ஆயில்யம் |
| 33. சாக்கியர் | மார்கழி | பூராடம் |
| 34. சிறப்புலியார் | கார்த்திகை | பூராடம் |
| 35. சிறத் தொண்டர் | சித்திரை | பரணி |
| 36. சேரமான் பெருமாள் | ஆடி | சுவாதி |
| 37. கணநாதர் | பங்குனி | திருவாதிரை |
| 38. கூற்றுவர் | ஆடி | திருவாதிரை |
| 39. புகழ்ச்சோழர் | ஆடி | கார்த்திகை |
| 40. நரசிங்கமுனையரையர் | புரட்டாதி | சதயம் |
| 41. அதிபத்தர் | ஆவணி | ஆயில்யம் |

| | | |
|---|---|---|
| 42. கலிக்கம்பர் | தை | ரேவதி |
| 43. கலியர் | ஆடி | கேட்டை |
| 44. சத்தியார் | ஐப்பசி | பூசம் |
| 45. ஐயடிகள் காடவர் கோன் | ஐப்பசி | மூலம் |
| 46. கணம்புல்லர் | கார்த்திகை | கார்த்திகை |
| 47. காரியார் | மாசி | பூராடம் |
| 48. நெடுமாறர் | ஐப்பசி | பரணி |
| 49. வாயிலார் | மார்கழி | ரேவதி |
| 50. முனையடுவார் | பங்குனி | பூசம் |
| 51. கழற்சிங்கர் | வைகாசி | பரணி |
| 52. இடங்கழியார் | ஐப்பசி | கார்த்திகை |
| 53. செருத்துணையார் | ஆவணி | பூசம் |
| 54. புகழ்த்துணையார் | ஆவணி | ஆயில்யம் |
| 55. கோட்புலியார் | ஆடி | கேட்டை |
| 56. பூசலார் | ஐப்பசி | அனுஷம் |
| 57. மங்கையர்க்கரசியார் | சித்திரை | ரோகிணி |
| 58. நேசர் | பங்குனி | ரோகிணி |
| 59. கோச்செங்கட்சோழர் | மாசி | சதயம் |
| 60. திருநீலகண்டயாழ்ப்பாணர் | வைகாசி | மூலம் |
| 61. சடையனார் | மார்கழி | திருவாதிரை |
| 62. இசைஞானியார் | சித்திரை | சித்திரை |
| 63. சுந்தரமூர்த்திநாயனார் | ஆடி | சுவாதி |

## பன்னிரு ஆழ்வார்கள்

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. மதுரகவியாழ்வார்
5. குலசேகராழ்வார்
6. பெரியாழ்வார்
7. ஆண்டாள்
8. தொண்டரடிப் பொடியாழ்வார்
9. திருப்பணாழ்வார்
10. திருமங்கையாழ்வார்

## தசாவதாரம்

யுகங்கள்நான்கு

அவை கிருயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் கலியுகம்

**கிருதயுகம் :** மச்ச (மீன்) கூர்ம (ஆமை) வராக (பன்றி) நரசிம்ம (ஆளரி) வாமனர் (குள்ளன்) ஆகிய ஐந்து வதாரங்கள்

**திரேதாயுகம் :** பரசுராமர் பலராம ஆகிய இரு வதாரங்கள்

**கலியுகம் :** கல்கி அவதாரம்

## அறுபடை வீடுகள்

| | | |
|---|---|---|
| 1. திருவேரகம் | - | அநாகதம் |
| 2. திருஆவினன்குடி | - | ஆக்தை |
| 3. பழமுதிர்ச்சோலை | - | பூரகம் |
| 4. திருச்சீரலைவாய் | - | சுவாதிஷ்டாணம் |
| 5. திருப்பரங்குன்றம் | - | மூலாதாரம் |
| 6. குன்று தோறாடல் | - | விசுத்தி |

## முருகனின் பல்வேறு பெயர்கள்

| | |
|---|---|
| 1. சரவணபவன் | - சரவணப் பொய்கையில் தோன்றியவர் |
| 2.காங்கேயன் | - கங்கையில் வளர்ந்தவன் |
| 3.குமரன் | - இளைய கடவுள் |
| 4.சண்முகன் | - ஆறுமுகம் கொண்டவன் |
| 5.கந்தன் | - ஆறு உருவங்களில் ஓர் உருவம் |
| 6.சேனாபதி | - தேவர்களின் சேனாபதி |
| 7.கஜவாகனன் | - யானை ஊர்பவர் |
| 8.கார்த்திகேயன் | - கார்த்திகைப் பெண்டிரால் வளர்க்கப்பட்டவன் |
| 9.மயில்வாகனன் | - மயிலேறும் பெருமான் |
| 10.குகன் | - பக்தர் மனக்குகையில் வாழ்பவன் |
| 11.சுவாமி நாதன் | - தந்தைக்கு உபதேசம் செய்தவன் |
| 12.தேசிகள் | - சுப்பிரமணியன் |
| 13.சக்திதாசன் | - தணிகை முருகன் அருள்ஞானச் சந்திரன் |
| 14.சுப்பிரமணியன் | - பிரம்மத்தில் உயர்ந்தவன் |
| 15.கடம்பன் | - கடம்ப மலரை உடையவன். |

16.பாவகி - அக்னியை உடம்பாக உடையவன்

17.வாகுலேயன் - கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பக்ஷிவாகனன்

மற்றும் ஆறுமுகக் குழகன் குரு காங்கேயன் குறிஞ்சி வேந்தன் சாமி, சுரேசன் சூர்பகைவன், செட்டி செவ்வேள் சேந்தன் சேய் வேற்கொடியோன் வேலன் முத்தையன் என்னும் பெயர்களம் உண்டு.

## நவக்கிரஹ வழிபாடு

| கிரகம் | நவக்கிரகங்கள் | பலன் |
|---|---|---|
| சூரியன் | சூரியனார் கோவில் | உடற்பிணி கண்நோய் நீங்கும் |
| சந்திரன் | திருப்பதி | ஆயுள்விருத்தி, செல்வ வளம் |
| அங்காரகன் | வைத்தீஸ்வரன் கோவில் | வெற்றி தைரியம் |
| புதன் | மதுரை | கல்வி அழகு, சிறப்பு |
| குரு | திருச்செந்தூர் | நல்வாழ்க்கை நன் மக்ட்பேறு |
| சுக்கிரன் | ஸ்ரீரங்கம் | புகழ் செல்வம் பெருகும் |
| சனி | திருநள்ளாறு | நீண்ட ஆயுள் |
| ராகு | காளகஸ்தி | சகலநோய் நீங்கும் |
| கேது | காளகஸ்தி | செல்வம் ஞானம் வெற்றி புகழ் |

## கவுடளர்க்கு உகந்த மலர்கள்

1. விநாகயர் - செம்பருத்தி, ரோஜா, தாமரை மற்றும் அறுகம்புல்
2. முருகர் - மல்லிகை முல்லை ரோஜா சூரியகாந்தி சாமந்தி
3. சிவன் - தும்பை வில்வம், தாமரை செம்பருத்தி சங்குமலர்
4. அம்பிகை - வெண்தாமரை மல்லிகை முல்லை செவ்வரளி செண்பகமல்லி சூரியகாந்தி
5. விஷ்ணு - பவளமல்லி தாமரை மற்றும் துளசி மருக்கொழுந்து

## கடவுளர்க்கு ஆகாதவை
## (தவிர்க்க வேண்டிய மலர்கள் )

1. விநாயகர் - துளசி
2. சிவன் - தாழம்பூ , உமத்தை எருக்கமலர்
3. விஷ்ணு - அட்சதை ஊமத்தை எருக்கமலர்
4. அம்பிகை - அறுகம்புல் ஊமத்தை எருக்கமலர்
5. லட்சுமி - தும்பை
6. சரஸ்வதி - பவளமல்லி

## வழிபாட்டிற்கான வில்வ இலைகள்
## பறிக்கக்கூடாத நாட்கள்

அஷ்டமி நவமி அமாவாசை பௌர்ணமி மாதப்பிறப்பு, சோமவாரம் சதுர்த்தி ஆகிய நாட்களில் பறிக்ககூடாது அந்நாட்களின் வழிபாட்டிற்கான வில்வ இலைகளை முன்தினம் மாலையே பறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

## சிவதரிசன்பலன்கள்

காலசந்தி - பிணிபோக்கும்
நண்பகல் - தனம் பெருகும்
மாலை - பாவம் அகலும்
அர்த்தசாமம் - முக்தி தரும்

## பஞ்சகிருஷ்ண தலங்கள்

1. திருக்கண்ணபுரம்
2. திருக்கண்ணமங்கை
3. திருக்கண்ணங்குடி
4. திருக்கண்ணன் கவித்தலம்
5. திருக்கோவிலூர்

## ஸ்ரீரங்கநாதர் காவிரிக் கரையிற் சயனம் செய்த மூன்று தலங்கள்

1. ஸ்ரீரங்கப்பட்டினம் - ஆதிரங்கம்
2. சிவசமுத்திரம் - மத்தியரங்கம்
3. ஸ்ரீரங்கம் - அந்தியரங்கம்

## கர்னாடகத்திலுள்ள ஏழு முக்கியத் தலங்கள்

1. மூகாம்பிகை
2. கோகர்ணம்
3. கோடேஸ்வரா
4. கும்பாசி
5. சங்கரநாராயணா
6. சுப்பிரமணியா
7. உடுப்பி

## வைணவத்தல மூர்த்திகள்


நாராயணர் - பத்ரிநாத்
கண்ணன் - மதுரா பிருந்தாவனம் துவாரகை கோகுலம்
ஜகந்நாதன் - பூரி
விட்டோபர் - பண்டரிபுரம்
ஸ்ரீநிவாசன் - திருப்பதி
வரதராஜன் - காஞ்சி
அரங்கநாதன் - திருவரங்கம்

## முத்தி தரும் தலங்கள்

பிறக்க வீடு தருவது - திருவாரூர்
இறக்க வீடு தருவது - காசி
கண்டு வழிபட வீடு தருவது - சிதம்பரம்
நினைக்க வீடு தருவது - திருவண்ணாமலை


தினமும் இந்த ஸ்லோகங்களையம் பாராயணம் செய்வோருக்கு எத்துணைத் துன்பமும் காலைப் பனிபோல் விலகிவிடும்.

# வம்சாவழி



சின்னத்துரை + சின்னத்தங்கச்சி
பொன்னையா + பொன்னம்மா
தர்மபூபதி [தவம்]
தங்கரத்தினம் (கிளி)
புவனேஸ்வரி
பாலசிங்கம்
சத்தியதேவி + செல்வராஜா
தயின்
கபித்
டனித்தா
சசிகலா + மங்களேஸ்வரன் (பேபி)
திவ்யன்
சுஜீபன்
கயன்
பவித்ரா
பவ்சிகன்
புவனேந்திரராஜா
மோனராஜா + ஸ்ரீலஷ்மி
சஜிர்தன்
கர்சன்
கிருபாலராஜா + விவேகினி
குஷாணி
தனுயா
விதுயா
அனுயா
நித்தியாதேவி + ஜெயானந்தன்
யனுசன்
நிவிசன்
தர்மபாலினி
சுயேந்தன் + பவ்யாதேவி

# நெஞ்சார்ந்த நன்றிகள்



எமது குடும்பத் தலைவிளக்காகத் திகழ்ந்து எம்மை அன்புடன் ஆதரித்து வாழ்ந்து அணைந்தும் அணையாத சோதியாய் அன்பும், பண்பு, பாசம் என்ற முக்குணங்களிலும் சிறந்து வாழ்ந்து அரும்பெரும் ஜோதியில் சங்கமித்த எமது குடும்பத் தலைவியின் இறுதிச்சடங்குகளில் பங்கு கொண்டு மற்றும் பல்வேறு வகைகளில் தேடி நாடிவந்து உதவி ஒத்தாசை புரிந்து எம்மை ஆறுதற்படுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்களுக்கும் அந்தியேட்டி கிரியைகளில் பங்கு கொண்டோர், இன்று நடைபெறும் முதலாம் ஆண்டு திவச ஆத்மசாந்திப் கிரியைகளில் பங்கு கொண்டு சிறப்பித்த யாவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரியது"

– குடும்பத்தினர்–

ஆனைக்கோட்டை வீதி,
குளப்பிட்டி சந்தி,
கொக்குவில்.

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதாகும்.

**"அதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"**

**பகவான்
ஸ்ரீ கிருஷ்ணர்**

